
# ஆத்மஜோதி

வைகாசி 1990



ஆசிரியர் சிறப்பு மலர்

கௌரவ ஆசிரியர்: "ஆத்மஜோதி" நா. முத்தையா

# ஆத்மஜோதி

## ஓர் ஆத்மீக மாத வெளியீடு


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே,

- சுத்தானந்தர்


ஜோதி: 36 பிரமோதூதஸு வைகாசி மீ 1-உ (15-5-90) சுடர் 2


இந்த இதழில்.........


| | |
|---|---|
| ஆசியுரை | — 33 |
| அறிமுகம் | — 34 |
| ஆசிச் செய்தி — — | — 36 |
| ஆசிரியரைப் பற்றி | — 38 |
| சைவ மக்களுக்கு | — 39 |
| பிரேமை மிகுந்த | — 40 |
| ஓடும் மனதின் பின்னே | — 41 |
| நாடகமே உலகம் | — 46 |
| கடவுளின் உயரறிவு | — 48 |
| பிறர் பொருள் எட்டி | — 49 |
| குருபக்தி | — 51 |
| பஜகோவிந்தம் | — 52 |
| மனதை அமைதிப் படுத்துவது | — 53 |
| தொழுவார் வினை | — 56 |
| பகவான் இராம கிருஷ்ணரும் | — 58 |
| கணபதி பஜனை | — 59 |
| பகவான் ரஜனீஷ் | — 60 |
| மனித மேம்பாட்டுக் கல்வி | — 63 |
| எமது ஆயுட் சந்தாதாரர்கள் | — 65 |


### அட்டைப் படம்


சைவத்தையும் தமிழையும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பரப்பிஆத்மஈடேற்றத்தை ஊக்குவித்துவரும் ஆத்மீக வள்ளல் ''ஆத்மஜோதி'' நா. முத்தையா அவர்களைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டிருப்பது நாம் செய்த பாக்கியம்.

— குருகுலத்தார்


### ஆத்மஜோதி சந்தா விபரம்

இலங்கைக்கு மாத்திரம்

| | |
|---|---|
| வருடச் சந்தா | — 60-00 |
| வெளி நாடுகளுக்கு ,, | — 150-00 |
| ஆயுள் சந்தா உள்நாடு | — 1000-00 |
| ,, ,, வெளிநாடு | — 2000-00 |
| தனிப் பிரதி உள்நாடு | — 5-00 |



**பொன்னாடை**

**திருவண்ணாமலையில் ஆத்மீக சேவைக்கு.**

போர்த்தியவர் :

**திருமுருக கிருபானந்தவாரியார்**

உ

ஓம் நாராயணாயநம

# ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

# ஆசிச் செய்தி . . .

ஆருயிருக் குயிரான அன்புச் சோதி
அறிவாலே அறியும்வழி காட்டும் சோதி
சீரதிக நான்மறையா கமமாஞ் சோதி
சிந்தனைத்தேன் மழைபொழியும் ஞான சோதி
தாரகதத் துவத்தெளிவை உணர்த்தும் சோதி
சராசரங்கள் பிடித்தேறும் ஏணிச் சோதி
பாரில்நா வலம்பதியில் முளைத்த சோதி
பல்லறிஞர் பழம்பறித்த ஆத்ம ஜோதி.

சித்தத்தெய் வீகநெறி நா. முத்தையா
சிவன்பாதப் பணியாக விதை விதைக்க
சுத்தமனத் தான்இராமச் சந்திரன் பேர்ச்
சுந்தரனார் திருமுறைநீர் சொரிந்து காக்க
பத்திவயற் பயிராகிப் புவன மெல்லாம்
பயன்கொடுத்த புகழ்ஆத்ம ஜோதி, தன்முப்
பத்தாறாண் டுவர்வயதில் கயவர் கூட்டப்
படையெடுப்பால் செயலிழந்து பள்ளி கொண்டான்.

ஆறாண்டின் பின்பள்ளி யெழுச்சி பாடி
அழைத்திட்டோம் கண்விழித்தான். அவனி யெங்கும்
ஏறாத மலையேறும் இருஷி அன்ன,
எம்முத்தை யரின்பாத யாத்தி ரைக்கோர்
பேறாக உதித்ததென ஆத்ம ஜோதி
பிரசன்ன மாயினன் சிவத்தேன் பொங்கி
ஆறேந்து சடையனுறை மேரு போல
ஆத்மஜோ திச்செல்வா வாழி வாழி.

அருட்கவி சீ. வினாசித்தம்பி

உ
சிவமயம்

# அறிமுகம்



## திரு. நா. முத்தையா அவர்கள்

ஆசிரியர் : " ஆத்மஜோதி "
ஆத்மஜோதி நிலையத் தலைவர்
நாவலப்பிட்டி
( ஸ்ரீ லங்கா )

கடந்த 30 ஆண்டுகளாக ஆத்மீகத்தைப் பரப்புவது ஒன்றையே முக்கிய நோக்கமாகக் கொண்டு நடைபெற்று வரும் 'ஆத்மஜோதி' என்னும் மாத வெளியீட்டின் ஆசிரியராகிய உயர்திரு நா. முத்தையா அவர்கள் இந்தோனேசியாவைச் சேர்ந்த மெடான் என்ற இடத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தாருடைய அழைப்புக்கிணங்கி 29-1-78-ல் தமது சமயப் பணிக்கான யாத்திரையை ஆரம்பித்து தற்போது சிங்கப்பூருக்கு வருகை தந்துள்ளார்,

இப்புனித யாத்திரையின் முக்கிய நோக்கம் செல்லும் இடங்களில் எல்லாம் கூட்டு வழிபாட்டில் மக்களை ஈடுபடுத்தலும் இறைவனுடைய நாம மகிமையைப் பரப்புதலுமாகும்.

இந்தோனேசியா செல்லும் மார்க்கத்தில் பல அன்பர்களுடைய வேண்டுகோளுக்கிசைந்து சிங்கப்பூரில் ஒரு மாத காலத்திற்கும், மலேசியாவில் இரண்டு மாத காலத்திற்கும் சமயத் தொண்டாற்றச் சம்மதித்துள்ளார்.

பிரமச்சாரியாக வாழ்ந்து இலங்கையில் கடந்த 37 ஆண்டுகளாக சமய அறிவும், கல்வி அறிவும் அற்ற பத்து லட்சம் மலையகத் தேயிலை ரப்பர்த் தோட்டத் தொழிலாளர் மத்தியில் சமயப் பணி ஆற்றிவருபவர். பகவான் ரமண மகரிஜி, பகவான் அரவிந்தர், சுவாமி சிவானந்தர், சுவாமி இராமதாசர், சுவாமி ஞானானந்தர், சுவாமி சுத்தானந்த பாரதியார், யோகர் சுவாமிகள் போன்றவர்களுடைய அத்தியாத்மத் தொடர்பைப் பெற்று அந்தர் யோகம், அகண்ட நாம ஜெபம், தியானம் போன்ற சமய சாதனைகளை

மக்களிடையே பரப்பி வருவதோடு கூட்டு வழிபாடு, வீட்டு வழி பாடு, பஜனை போன்றவற்றையும் முன்னின்று நடத்தி மக்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்றவர்.

சமயத்தைப் பேச்சளவில் மாத்திரம் வைத்துக்கொள்ளாது சாதனை மூலம் மக்கள் உணரவேண்டும் என்பதற்கான பலவித பயிற்சிகளை அளித்துவருபவர். பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் பல ஆத்மீக நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றோம்.

திருமூறைக் காட்சி, திருமுறைச் செல்வம், மூப்பெருஞ்சித்தர், ஸ்ரீலஸ்ரீ சிவபாலயோகி, கேதார்பத்திரி யாத்திரை, ஏழாலை, தத்துவக் கதைகள், பன்னிரு மாத நினைவுகள், இலங்கையில் ஓர் இல்லற ஞானி என்பன அவற்றுட் சிலவாகும். இன்னும் பல நூல்கள் அச்சுவாகனம் ஏறுவதற்கு ஆயத்தமாக உள்ளன.

கடந்த பல ஆண்டுகளில் இந்தியாவிலும் மலேசியாவிலும் நடை பெற்ற சமய மாநாடுகள் பலவற்றில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து மகாநாடுகளின் வெற்றிக்கு ஆக்கபூர்வமான பல கருத்துக் களைத் தெரிவித்துள்ளார். முக்கியமாக இளஞ்சிறுர்களுக்கு இளமை யிலிருந்தே சமயக்கல்வி ஊட்டப்பட வேண்டுமென்றும், சகல பாட சாலைகளிலும் சமயம் கட்டாய பாடமாக்கப்பட வேண்டுமென் பதோடு அகில உலகிலும் பசுவதை தவிர்க்கப்பட வேண்டுமென் பதையும் மகாநாடுகளில் வற்புறுத்தியுள்ளார்.

இலங்கையில் உள்ள நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலய அதிபராகப் பணிபுரிந்து தற்போது ஓய்வுபெற்றுள்ள திரு. நா. முத் தையா அவர்கள் தமது ஓய்வுநேரம் முழுவதையும் சமயப் பணிக் கென்றே அர்ப்பணித்துள்ளார்.

இத்தகைய பெரியாருடைய சிங்கப்பூர் மலேசிய விஜயத்தைப் பயன்படுத்தி ஆத்மீக அருளனுபவங்களைப்பெற விரும்பும் சமயச் சங்கங்களும் ஆத்மீக தாகங்கொண்ட அன்பர்களும், பின்வரும் விலா சதாரருடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**( சிங்கப்பூர் விஜயத்தின் போது )**

# ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள்

## " நந்தி "

பல்கலைக் கழகத்தின் கவுன்சில், இதே நேரம் நடைபெறுவதால் பெரியார் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் 70-ம் ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்கு நேரிலே வர முடியவில்லை. ஆகவே எனது நல் வாழ்த்துக்களை இந்தச் சிறு செய்தி மூலம் அனுப்புகிறேன்.

இவ்வேளை, 1978 ஆம் வருடம் நாவலப்பிட்டியில் நடைபெற்ற சஷ்டியப்த பூர்த்தி விழா ஞாபகத்தில் வருகிறது. அந்த விழாவிலே சாந்தி, ஊர்வலம், பொன்னுடை போர்த்தல், விசேட பூஜை, பொதுக்கூட்டம் எல்லாம் நடைபெற்றன. பொதுக்கூட்டத்தில் அமரர் K. P. ஹரன், உயர்திரு லக்ஷ்மண ஐயர் போன்ற அறிஞர் பங்கு பற்றினர். ஆம்மஜோதி சஞ்சிகை ஒரு சிறப்பிதழை வெளியிட்டது. அந்த இதழுக்குச் சிறப்பு மலர் ஆசிரியராகப் பணியாற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதில் " மணி விழா நாயகர் " என்ற தலைப்பில் ஆசிரிய தலையங்கம் எழுதியதுடன், மாஸ்ரரின் வாழ்க்கைக் குறிப்பையும் பொன் - மணி - முத்து என்ற தலைப்பில் சேர்த்திருந்தேன். மாஸ்ரரின் தாயார் பொன்னுப்பிள்ளை, தந்தையார் நாகமணி, மாஸ்ரரோ முத்து ஐயா. இவற்றை வைத்துத்தான் பொன்-மணி-முத்து என்ற தலைப்பு அழகாகவும் பெறுமதியுள்ளதாகவும் அமைந்தது.

அது 1978 இல். அதன்பின் வந்தது 1983. அந்த வருடம் இலங்கையின் சரித்திரப் பாதையில் பொல்லாத மைல் கல். அந்த வருடம் ஆத்மஜோதி நிலையமே எரிக்கப்பட்டது. இலங்கையின் ஐக்கியம் பொசுக்கப்பட்டது. ஆத்மஜோதி சஞ்சிகையும் நின்றுவிட்டது. அதைத் தொடர்ந்து, எமது விழா நாயகரின் அருமைத் தம்பி, எமது அருமை நண்பர் அருமை நாயகம், மனம் உடைந்த நிலையில் எம்மை விட்டுப் பிரிந்தார்.

இப்படியான நிலையிலே தொடர்ந்து சமயத் தொண்டை பல விதங்களில், பலருடன் சேர்ந்து, பல இடங்களில் புரிந்து வருவதுதான் ஆத்மஜோதி அவர்களின் ஆளுமையாகும். எக் காரணம் கொண்டும் மனம் உடையாதவர் அவர். சமயத் தொண்டு செய்வதைத் தவிர வேறு எந்தக் கருமத்தையும் நினைக்காதவர். அவர் புரியும் எந்தக் காரியமும் சமயத் தொண்டை நோக்கியே செல்லும். தொண்டு செய்வதில் அவர் வளர்ந்து வருகின்றார்; தொண்டின் மகிமை குறையாது. செய்யும் முறைதான் மாற்றமடையும்.

சஞ்சிகையைத் தொடக்க முடியாத நிலையில் அவர் பஜனை, சொற்பொழிவு, பாதயாத்திரை என்ற முறைகளில் சமயத் தொண்டை ஆற்றிவருகிறார். ஒரு புதிய தொண்டர் குழுவை உருவாக்கி வருகின்றார்.

70 ஆம் வருட பூர்த்தியை நாம் கொண்டாடும் இவ் வேளையில் எனது அன்பையும், ஆசியையும், வணக்கத்தையும் இக்கடிதம் மூலம் தெரிவிக்கின்றேன்.

நாம் அவருடைய 80 ஆம் 90 ஆம் ஆண்டு நிறைவு விழாக் களையும் கொண்டாடுவதற்குப் பூரண சுகத்தையும் அற்புத ஆற்றலையும் அவருக்கு இறைவன் அருள்வாராக.

அன்புடன்

நந்தி

(70 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் போது)

## பொன்மொழிகள்

உணவு உண்ணும் முறை: கிழக்கு நோக்கி உண்டால் ஆயுள் வளரும், மேற்கு நோக்கி உண்டால் பொருள் வளரும், தெற்கு நோக்கு உண்டால் புகழ் வளரும், வடக்கு நோக்கி உண்டால் நோய் வளரும்.

— திருமுருக கிருபானந்த வாரியார் —

# ஆசிரியரைப் பற்றி . . .

அன்பிற்கும் பாராட்டுதலுக்கு முரிய நமது ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக அண்ணாமலை அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

தங்களுடைய வாழ்க்கைப் பயணத்தில் 70 ஆண்டுகள் இனிதே பயணம் செய்து நிறைவு செய்து 71 ம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் செய்தி சிந்தைக்கும் செவிக்கும் இனியச் செய்தியாக இருக்கிறது. மிக்க மகிழ்ச்சி, நன்றி! பாராட்டு. வாழ்த்துக்கள். தாங்கள் சிறந்த ஆன்ம நலமும், மனிதநேயமும் உடையவர்கள், தாங்கள் பல்லாண்டுகள் வாழ்க.

தாங்கள் இலங்கையில் நடைபெறும் மனிதகுல பகைமையை நிறுத்தப் போராடவும், சமாதான முறையில் அமைதியை கொணரவும் பணி செய்ய இயலுமா? தாங்கள் பணி செய்ய முன்வந்தால் நாமும் வந்து கலந்துகொள்கிறோம். நம்முடைய எஞ்சிய வாழ்நாளில் மனிதப் படுகொலைகளை எதிர்த்துப் போராடி அதில் மரணத்தைத் தழுவினால் கூட நல்லது என்ற அளவுக்கு நமக்கு நெஞ்சு உறுத்தல் இருச்கிறது. ஆயினும் அங்கு களத்தில் யாராவது சிலர் வேண்டுமே என்பதுதான் கவலை. தாங்கள் அதற்கு ஏற்றயாத்திரம். தங்கள் கருத்து என்ன என்று தெரிந்துகொள்ளாமலேயே நாம் எழுத நேரிட்டுவிட்டது. தாங்கள் அன்புகூர்ந்து தவறாக எடுத்துக் கொள்ளாமல் பொறுத்தாற்றிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். தங்களுடைய 71-ம் ஆண்டு பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ள இயலாமல் காலமும் இடமும் தடை செய்கின்றனவே என்ற கவலை நமக்கு இருக்கிறது.

தங்களுக்கு மீண்டும் பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்!!
என்றும் வேண்டும் இன்ப அன்பு.

இங்ஙனம்
**குன்றக்குடி அடிகளார்**

**(70ம் ஆண்டு நிறைவு விழாவின்போது)**

— சைவ மக்களுக்குக் கிடைத்த பெருவாய்ப்பு —

சிவத்தமிழ்ச்செல்வி

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

( தர்மகர்த்தா - துர்க்கா தேவி ஆலயம் - தெல்லிப்பழை )

# வாழ்த்து

ஆத்மஜோதி ஆசிரியரின் சஷ்டியப்த நிறைவு விழாவில் அடியேனது வணக்கத்தையும், வாழ்த்தையும் தெரிவிக்க வேண்டியது பெருங்கடனாகும்.

பெரியார் அவர்கள் தமது சொல்லாலும், எழுத்தாலும் பணிபுரிந்து வரும் சிறப்பை அகில உலகமும் அறிந்து போற்றுகிறது. ஆசிரியர் பணியை அன்புப் பணியாகவும் அறப் பணியாகவும் ஆற்றி ஆயிரம் ஆயிரம் மாணவ உள்ளங்களில் இடம் பெற்றவர் எங்கள் முத்தையா மாஸ்ரர் அவர்கள். நாவலப்பிட்டி நகரோடு ஒன்றிவிட்ட நாமம் அவருடைய பெருநாமம் என்றால் அதில் மிகையொன்று மில்லை. வாழ்ந்து காட்டுவதிலும் இப் பெருந்தகையார் முன்னணியில் திகழ்கிறார். தியானமறு உணர்வும், சிவநாம பஜனையும், திருத்தொண்டின் நெறியைப் பரப்பலும் பெரியாரின் வாழ்வில் நாம் காணும் சிறப்புகளாகும். இந்தியா, மலேசியா முதலாம் நாடுகளுக்குச் சென்று பல மகா நாடுகளிலும் சைவ ஸ்தாபனங்களிலும் பங்குகொண்டு பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

இன்று பெரியாருடைய சஷ்டியப்த பூர்த்தி விழாவில் பங்குகொள்ளும் வாய்ப்பு சைவ மக்களுக்குக் கிடைத்த பெருவாய்ப்பாகும். இந் நாளில் ஆசிரியப் பெருந்தகையாரின் நற்பணிகளைப் போற்றி பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டுமென்று வாழ்த்தி நிற்கிறேன்.

( சஷ்டியப்த பூர்த்தி விழாவின் போது )

# பிரேமை மிகுந்த பிரேமாத்மானந்தஜீ

சிலருக்கு பெயருக்கேற்ற குணங்கள் இருக்கும். ஒரு சிலருக்கு அதற்கு எதிர்மாறாகவே அமைந்து விடுகிறது. கோடீஸ்வரி அன்னபூரணி என்று அருமையான பெயர் வைத்திருப்பார்கள். அவர்களோ ஒருநேரச் சாப்பாட்டிற்காக தெருத் தெருவாக அலைவார்கள்.

சுவாமி பிரேமாத்மானந்தஜி வெள்ளவத்தை இராமகிருஷ்ண மடத்தில் தலைமைச் சுவாமிகளாக இருந்தவர்கள். அவர்களை நாம் பார்க்கும் போதெல்லாம் பிரேமையே உருக்கொண்ட ஒரு தோற்றத்தைத்தான் பார்த்தோம். மெலிந்த உருவம், சிறந்த சிந்தனை, குறைந்த சொற்களையே பேசுவார். அவை அத்தனையும் பொருள் பொதிந்த சொற்களாகவே இருக்கும்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் என்னும்போது எம்மையும் அறியாமல் சுவாமி மீது ஒரு பிரேமை ஏற்படத்தான் செய்கிறது. குறித்த நேரத்தில் குறித்த விடயங்களைச் செய்து முடித்தலில் நல்ல பழக்கம் உடையவர். யாராவது தப்பான வழியில் செல்வதைக் கண்டால் அதனைப் பொறுக்கமாட்டார்.

**" நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே**
**சீர் ஒழுகு சான்றோர் சினம் "**

என்ற இலக்கியத்திற்கு இலக்கணமானவர். இராமகிருஷ்ண மடத்திற்குச் செல்லும் போதெல்லாம் சுவாமிகள் இராமகிருஷ்ண பரமஹம்சர், சாரதாதேவியார், சுவாமி விவேகானந்தர் மூவரையும் நினைவூட்டிக் கொண்டிருப்பார். சுவாமிகள் அணியும் குல்லா மகாத்மாவை நினைவூட்டிக் கொண்டிருக்கும். சுவாமிகளின் மறைவு பற்றிய பத்திரிகைச் செய்தியைப் பார்த்தபோது நடக்காதது நடந்துவிட்டது என்று சொல்லத்தான் தோற்றியது. அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போமாக !

சிவமயம்

# - ஓடும் மனதின் பின்னே ஒருநாள் -

## [ ஆத்மஜோதி நா. முத்தையா ]

ஒருநாள் உலாவச் சென்றேன். எனது உடலைவிட மனம் மிக வேகமாக ஓடிக்கொண்டே இருந்தது. தியானத்தின் பொழுதெல்லாம் எத்தனையோ தந்திரங்கள் செய்து "கொஞ்ச நேரமாவது என்னுடனே இருக்கக் கூடாதா?" என்று மனதைக் கெஞ்சி மன்றாடி என்னுடனே இருக்கச் செய்வேன் சிலவேளைகளில் நல்ல இசைப் பாடல்களை நான் பாடியும் பிறரைக்கொண்டு பாடச் செய்தும் இசைத் தட்டுக்களைக் கேட்டும் கொஞ்சநேரம் என்னுடன் தங்கச் செய்வேன். இன்னுஞ் சில நேரங்களில் நாமஜெபம் செய்து கொஞ்ச நேரம் தங்கச் செய்வேன்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் மூச்சுப் பயிற்சி செய்து மனதை என்னுடன் தங்கச் செய்வேன். சில வேளைகளில் பக்தர்களுடைய சரித்திரத்தை வாசித்துக் காட்டி அக்கதையில் மனதை லயிக்கச் செய்வேன். அக்கதைகளில் சிலவேளை மனது தன்னையே பறி கொடுத்துவிடும். "இப்படி எப்போதும் என்னுடனே இருந்தால் என்ன?" என்று கேட்டுப் பார்ப்பேன்; கெஞ்சுவேன்; "நல்லவனாக நீ இருக்க வேண்டாமா?" என்று தட்டிக் கொடுப்பேன். எத்தனை புத்தி சொன்னாலும் கேட்பது போலவே கேட்டுக்கொண்டிருக்கும். ஆனால் அடுத்த கணம் என்னை அறியாமல் வெளியே போய்விடும். ஒரு பெரியவர் வயிற்றைப் பார்த்துப் பின்வருமாறு பாடினார் :-

> ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்
> இருநாளைக் கேலென்றால் ஏலாய் - ஒருநாளும்
> என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே
> உன்னோடு வாழ்தல் அரிது.

இந்த மனதைப் பார்த்து ஒவ்வொரு நாளுந்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். "ஏ, மனமே! உன்னோடு வாழ்வதிலும் பார்க்க, நான் எங்காவது பரதேசம் போனாலோ?" என்று எண்ணுவேன். "இயலுமானால் அப்படிப் போய்த்தான் பாரேன்!" என்று அது சிரிக்கும்.

" குழந்தைப் பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்று சொல்லுவார்களே! அதுபோல நீயும் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாயா?" என்பேன். "என்னை அழச் சொல்லு கிறாயா?" என்று அது திருப்பிக் கேட்கும். "நான் உன்னோடு இருக் கிறபடியினாலே தானே இத்தக் கொட்டமெல்லாம் அடிக்கிறாய். உனக்குச் சொல்லாமல் கொள்ளாமலே நான் ஒரு நாளைக்கு உன்னைத் தவிக்க விட்டுச் சென்று விடுவேன் தெரியுமா?"

"அப்படி வல்லமை உண்டானால் சென்றுதான் பாரேன்!"

"நீ எத்தனை பிறப்பெடுத்திருக்கிறாய் என்று உனக்குத் தெரியுமா? உனக்கு எங்கே தெரியப் போகிறது! நீ ஒரு அற்பப்பயல். அருண கிரியார் ஒரு கணக்குச் சொல்லுகிறார். அதனைக் கேள்.

எழுகடல் மணலை அளவிடின் அதிகம்
எனதிடர் பிறவி அவதாரம்.

ஏழு கடலிலுள்ள மணலை அளவிட்டு விடலாம். நான் பிறந்த பிறவியின் எண்ணிக்கையைச் சொல்லமுடியாது என்கிறார். முருகன் அருள்பெற்ற அவராலேயே சொல்லமுடியவில்லை; அற்பப்பயலாகிய உன்னால் மாத்திரம் கணக்கிட முடியுமா? கவி காளமேகம் ஒரு கணக்குச் சொல்லுகிறார்.

கன்னபுர மாலே கடவுளிலும் நீ அதிகம்
உன்னிலுமோ நான் அதிகம் - ஓதக்கேள்
உன்பிறப்போ பத்து உயர் சிவனுக் கொன்றுமில்லை
என் பிறப்போ எண்ணத் தொலையாதே.

திருக் கண்ணபுரத்திலே உள்ள திருமாலே! சிவபெருமானிலும் நீ உயர்ந்தவன்; ஆனால் உன்னிலும் நான் உயர்ந்தவன்; எதில் என்று நினைக்கிறாய்? நீ பத்துப் பிறவி எடுத்தாய். சிவனுக்கோ ஒரு பிறவி யும் இல்லை. ஒன்றுமில்லாதவனிலும் பார்க்க பத்து வைத்திருப்பவன் உயர்ந்தவன்தானே? நான் பிறந்த பிறப்பின் அளவோ சொல்லி முடியாது. அதனால் நான் உன்னிலும் உயர்ந்தவன் தானே? கவி காளமேகத்தினாலும் கணக்குக் காட்ட முடியவில்லை. உனக்கு என்ன தெரியும்? என்று ஏளனம் செய்தது மனம். அதன் ஏளனத்தை என்னால் பொறுக்கமுடியவில்லை. என்ன செய்வது?

"இத்தனை பிறப்புக்களிலும் உன்னோடு நான் கூடி வந்திருக் கிறேன் என்பதாவது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டது எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

" மனம் என்னுமோர் பேய்க்குரங்கு மடப்பயலே
மற்றவர்போல் எனை நினைத்து மருட்டாதே கண்டாய்
இனமுற என்சொல்வழியே சுகமாய் இருந்திடுநீ!
என் சொல்வழி ஏற்றிலையானாலோ
தினையளவுன் அதிகாரம் செல்ல வொட்டேன்
உலகஞ்சிரிக்க உனைஅடக்கிடுவேன் திருவருளால் கணத்தே
தனவிலெனை அறியாயோ யாரென இங்கிருந்தாய்
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே."

என்று சிறிது வெருட்டிப் பார்த்தேன். அதற்கு மனம் பெரி தாகச் சிரித்தது. " உப்பிடி என்னை எத்தனையோ பேர்கள் வெருட் டித்தான் பார்த்தார்கள். நான் சொல்லுகிறபடி நீ கேட்கப் போகி ருயா? அல்லது நீ சொல்லுகிறபடி நான் கேட்பதா?" என்று மனது என்னைப் பார்த்துக் கேட்டது. "வாழ்நாள் முழுவதும் நீ சொல்லுகிறபடி தானே நான் கேட்டு வருகிறேன். நீ சொல்லுகிற படி கேட்டுக் கேட்டு நான் அலுத்துவிட்டேன்; களைத்துப் போனேன். ஒவ்வொரு நாளும் கொஞ்சக் கொஞ்ச நேரமாவது என்னுடன் அமைதியாக இருந்தால் எனக்கும் எவ்வளவோ சந்தோஷம், உனக் கும் எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும். அல்லவா?

" நான் இன்று கொஞ்சநேரம் காற்றுட உலாவி வரலாம் என்று புறப்பட்டேன், நீயோ ஓட்டமாய் ஓடுகின்ருய். உன் பின்னே இன்று வருகின்றேன். ஓட்ட முடிவில் பலன் என்னவென்று பார்ப் போம். 42 அடி அகலத்தில் அரசாங்கம் பெருந் தெருவை திறந் துள்ளது. இவ்வளவு அகலமான வீதி இருக்கத்தக்கதாக சிலர் மாலை ஐந்து மணியானதும் தண்ணீர் ஓடும் கானுக்குள் விழுந் தெழும்பிச் செல்வதைப் பார்க்கின்றோம். அதுபோல் இறைவன் வகுத்த இராஜபாட்டை ஒன்றிருக்கத் தக்கதாக நீ ஏன் கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதை வழியே கூட்டிச் செல் கிருய்? உன் குணம் அறிந்து போலும் தாயுமானவர் என்ற சித்த புருஷர்-

" காடுங் கரையும் மனக்குரங்கு கால்விட்டோட அதன் பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ?"

என்று கூறினார். இப்படி என்னை நீ இழுத்தடிப்பதால் என்ன பயனைக் கண்டாய்? உன்னைக் குரங்கு என்று சொன்னதில் எவ் வளவு உண்மையுண்டு? ஏ, மனமே! நீயோ காற்றின் அம்ச மாகப் பிறந்தவன். காற்று எப்பொழுதும் சலித்துக்கொண்டே

இருக்கும். அதுபோல் நீயும் எந்த நேரமும் சலித்துக்கொண்டே இருக்கிறாய்.! குரங்கு ஒரு கணமும் சும்மா இருக்காது. அது போலத் தான் நீயும் அலைந்து கொண்டே இருக்கிறாய்! அலைவதில் நீ குரங்கை வென்று விட்டாய்.

"குரங்கு ஒரு கிளையிலிருந்து இன்னொரு கிளைக்குத் தாவும் போது பிடித்த கிளையை விட்டுத்தான் அடுத்த கிளைக்குத் தாவுகிறது நீயோ என்றால் பிடித்த கிளையையும் விடுகிறாய் இல்லை. புதிய கிளையையும் விடுவதில்லை. எத்தனை கிளை என்றாலும் அத்தனையையும் ஒரே நேரத்தில் பற்றிக் கொள்ளுகிறாய்.

"குரங்குக்கு கள்ளைக் குடிக்கக் கொடுத்தால் அது என்ன பாடு படும் என்பது எல்லாரும் அறிந்த ஒன்றுதானே? அதுபோல நீயும் ஆசையாகிய கள்ளைக் குடித்து அலைகின்றாய். கள்ளுக் குடித்த குரங்குக்கு நட்டுவக்காலி கொட்டினாற்போல ஆசையாகிய கள்ளைக் குடித்த உனக்கும் பொறாமையாகிய நட்டுவக்காலி கொட்டிவிட்டது. இதுதான் உனது இலட்சணம். இந்த இலட்சணத்தில் உன்னோடு என்னையும் இழுத்தடிக்கிறாயே!

"அப்பர் சுவாமிகள், குறிக்கோளிலாது கெட்டேன்" என்கிறார். நீ என்ன குறிக்கோளோடு அலைந்து திரிகிறாய்? பேய் குறிக்கோளிலாது அலைந்து திரிவது போலல்லவா நீயும் அலைந்து திரிகிறாய். இதனால் உன்னை மனப்பேய் என்று கூடச் சொல்கிறார்கள் அல்லவா?

"எல்லோருக்கும் ஒரு குறிக்கோள் உண்டு. அதுதான் இறைவன் திருவடி. வாழ்க்கையின் குறிக்கோள் அதுவாயிருக்க அதை அடைய விடுகிறாயில்லையே! சாதனையின் குறிக்கோள் இரண்டு. ஒன்று மனப் பரிசுத்தம்; அடுத்தது மனோலயம். இந்த இரண்டுமே உன்னிடம் காணப்படவில்லையே! "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்" என்று வள்ளுவர் கூறிச் சென்றார். மனதில் கெட்ட நோக்கம் இல்லாது செய்கிற நல்ல காரியம்தான் அறம். அது எவ்வளவு சிறியதாயினும் பாதகம் இல்லை; ஆனால், மனதில் ஒரு கெட்ட நோக்கத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு பெரிய தர்மத்தைச் செய்தாலும் அது வெறும் ஆடம்பரத்துக்காகச் செய்வதேயாகுமல்லாது அறம் ஆகாது.

"மனதில் குற்றமில்லாது செய்கிற அறம் எதுவென்றால், பொறாமை. சுயநல ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் மனதில் இடம் கொடுக்காமல் செய்கிற காரியங்கள் எல்லாம் நல்ல காரியங்களாகவே இருக்கும். ஒருவன் தன் மனதையும் தன்னையும் கெடுக்கக்கூடிய ஆசாபாச அலங்காரங்களை

யும், கூத்துகளையும், ஸ்திரிகளையும், வீண்கதைகளையும், சிற்றின்பப் பாடல்களையும் பார்க்கவும் கேட்கவும் தலைப்பட்டால், அவசியமான படிப்பில் ஆதரவு குறைந்து கடைசியில் ஒன்றுக்கும் உதவாத மூடனுவான்.

"ஏ, மனமே! நீ பஞ்ச புலன்களை அடிமைப் படுத்துகிறுயா? அன்றி அவை உன்னை அடிமைப்படுத்துகின்றனவா? என்பதையே என்னுல் அறிய முடியவில்லையே!. சிங்கத்தினின்று ஒரு குணத்தையும் கொக்கினிடத்திலிருந்து ஒரு குணத்தையும், கோழியினிடத்திலிருந்து நான்கு குணங்களையும், காக்கையிடத்திலிருந்து ஐந்து குணங்களையும் நாயிடத்திலிருந்து ஆறு குணங்களையும், கழுதையிடத்திலிருந்து மூன்று குணங்களையும், கிரகிக்க வேண்டும் என்று பெரியோர் கூறுவர். உன்னிடத்தில் இருந்து என்ன குணத்தைக் கிரகிக்க வேண்டும் என்பதை அறியாது தவிக்கின்றேனே!

"காரியம் அற்பமாயினும் பெரியதாயினும் அதை முழுமுயற்சியோடு செய்வது சிங்கத்தின் குணம். "ஓடுமீன் ஓட, உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு" என்பதுபோல் இந்திரியங்களை அடக்கிக் காத்திருந்து காலம் பலம் முதலியவற்றை அறிந்து எக்காரியத்தையுஞ் செய்வது கொக்கின் குணம். தக்க சமயத்தில் விழித்துக்கொள்வதும், சண்டையில் பின் வாங்காமையும், கிடைத்தவற்றை பந்துக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தலும், தானே வலிய ஆக்கிரமித்தலும் கோழியின் குணங்களாகும்.

"தைரியமும் தக்க சமயத்தில் உணவு சேகரித்தலும், சாவதானமாயிருத்தலும், பிறரிடம் விசுவாசமின்மையும் காக்கையின் குணங்களாகும். கிடைத்த இடத்தில் உண்பதும், அற்ப உணவைக் கொண்டு மகிழ்தலும், நினைத்த நேரத்தில் தூங்கி விழித்தலும், தலைவனிடம் விசுவாசமும், சௌக்கியமும் நாயினிடமுள்ள குணங்களாகும். தான் எவ்வளவு சிரமத்தை இடைந்திருந்தாலும் சுமையைத் தாங்குதலும், குளிர் வெப்பத்தைப் பொறுத்தலும், கழுதையினிடமுள்ள குணங்களாகும். மேற்கூறிய இருபது குணங்களையும் கைக்கொள்பவன் எக்காரியத்திலும் வெற்றி பெறுவான்.

"ஏ, மனமே! பகுத்தறிவுள்ளவன், ஆறு குணங்கள் ஆறறிவு படைத்தவன் என்றெல்லாம் பெரிதாகக் கூறிக் கொள்கின்றுயே ஐந்தறிவு மாத்திரமுடைய மிருகங்களிடமுள்ள நல்ல குணங்களின் சிலவற்றையாவது உனக்காக்கி வைத்துக் கொள்ளவில்லையே! இப்பிரபஞ்சத்தில் தோன்றிய ஜீவராசிகள் அனைத்தும் ஆனந்தத்தை நாடிநிற்கும் இயல்புடையன. ஆனுல் நீயோ பழக்கதோஷத்தால் போலும் அலைந்து திரிவதையே இன்பமென்று கருதுகின்றுய், ஆகவே உன்னேடு வாழ்தல் அரிது."

# நாடகமே உலகம்

— ஆசிரியர் —

ஈழத்தில் தமிழ்ப் பிரதேசம் ஒன்றில் ஒருசிறு கிராமம். அக் கிராமத்தில் ஒரு இடுகாடு. அதில் பல சமாதிகள். ஒருநாள் ஒரு இளம் பெண் இரண்டு நாட்களுக்கு முன் தன் கணவனைப் புதைத்த புதைகுழியில் விசிறி கொண்டு விசிறிக் கொண்டிருந்தாள்.

இதனைக் கண்ணுற்ற பெரியவர் ஒருவர் அவள் செயலுக்கு மனமிரங்கி "மகளே! நீ விசிறும் காற்று இவ்வளவு மண்ணையும் தாண்டி கணவனுடைய உடலை எட்டும் என்று நினைக்கிறாயா? உலகில் பிறந்தவர் எல்லாம் இறப்பது உண்மை. ஆதலால் துன்பத்தை ஆற்றி வீடு செல்" என்றார்.

அதற்கு அவளோ "ஐயா, நீங்கள் என் நிலையை உணரவில்லை என்பது எனக்கு நன்கு தெரிகிறது." என்று சொன்னதுமே பெரியவரின் கண்களிலிருந்து கண்ணீர் மழைபோலச் சொரிந்தது. உடனே அவள் பெரியவரைத் தேற்றிவிட்டுச் சொன்னாள்: "எனக்குத் திருமணமாகி ஒரு வருடந்தான் ஆகிறது, என் கணவர் மரணத்தின் பிடியில் இருக்கும் போது, என்மேல் இரக்கங் கொண்டு "நான் இறந்தபின் நீ கல்யாணம் செய்து கொள்வாயா?" என்று கேட்டார்.

"நான் 'செய்து கொள்வேன்' என்று தலை அசைத்தேன். "அப்படியானால், என் கல்லறையில் ஈரம் காயுமுன்பாகக் கல்யாணம் செய்து கொள்ளாதே" என்றார். நானும் "சரி" என்றேன். இந்தக் கல்லறை கட்டி இரண்டு நாளாகப் போகிறது. இன்னும் ஈரம் காய்ந்த பாடில்லை, அதற்காகத்தான் சமாதி உலர விசிறிக் கொண்டிருக்கிறேன்." என்றாள்.

இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த பெரியவர் "நாடகமே உலகம்!" என்று எண்ணி வியந்து, கண்ணீர் விட்டுக் கொண்டே அவ்விடத்தை விட்டு அகன்றார். இப்போது அவர் சிந்தும் அக் கண்ணீர் சமாதியில் உறங்கும் அவள் கணவனுக்காக.

"இப்படியும் ஒரு மனமா? ஒரு பெண்ணா?" என்று நீங்கள் கேட்கலாம். கற்பனைகளை விட இன்று உண்மைச் சம்பவங்களே சிறந்த உதாரணங்களாகக் காணப்படுகின்றன. அன்பு என்றால் என்ன? என்பதைப் பலர் இன்று அறியார். அன்பு வேறு, கடவுள் வேறு என்று கருதுவோர் அன்பையும் அறியார், கடவுளையும் அறியார். திருமணத்தை ஆயிரம் காலத்துப் பயிர் என்பர். அதாவது ஆயிரம் பிறைகாணும் வாழ்க்கை. அதாவது அமிர்தோற்சவம் காணும் எண்பது ஆண்டு வாழ்வு ஆகும்.

இதற்கு முன் கடந்த காலம் இனிமேல் திரும்பி வரப் போவதில்லை. எதிர் காலமும் எமது கையில் இல்லை. இந்தக் கணப் பொழுதுதான் நமது கையில் உள்ளது. அதனை எப்படிக் கழிக்க வேண்டும்? என்பது கேள்வி. இறை வழிபாடு ஒன்றே இம்மைக்கும் மறுமைக்கும் சென்று உதவுவது. ஆகவே கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை நாம் பயன் படுத்தத் தெரிந்துகொள்ள வேண்டும்.

காளிதாசன் போசராசனுக்குக் கூறினான்: "அரசே! உனது பிடிவாதத்தினால் உனக்கு மரணம் நேர்ந்துவிட்டது. இன்னும் ஏழரை நாழிகை நேரந்தான் உனது உடலில் உயிர் தங்கும். ஆதலினால் இதற்குள் ஏதாவது உயர்ந்த கருமத்தைச் செய்து கொள்" என்றான்.

எமக்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் நேர்ந்தால் நாம் என்ன செய்வோம் என்பதைச் சற்றே சிந்திந்துப் பார்க்கவேண்டும். போசன் மரணத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை. கவலைப்பட்டாலும் இறந்து தானே ஆகவேண்டும்! "காளிதாசா, இப்படி உட்கார்!" என்றான். இருவரும் மாறி மாறி இராமாயணம் பாடினர். பாடி முடிய போசனும் இறந்தான். இருவரும் சேர்ந்து பாடிய பாடல்தான் போச சம்புராமாயணம் என்று இன்றும் அழைக்கப்படுகின்றது. கிடைத்த சந்தர்ப்பத்தை மனிதன் பயன்படுத்தும் அளவிற்கு மேலோன் ஆகின்றான். கிடைத்தற்கரிய மானிடப் பிறவி கிடைத்துள்ளது. இப்பிறவியைப் பயன்படுத்தும் அளவிற்கு மனிதன் மேலோன் ஆகிறான். கடவுள் வழிபாடு ஒன்றினால்தான் மனிதன் அமைதி பெறமுடியும்.

பாலர்களுக்கு

# கடவுளின் உயரறிவு

முன்னொரு காலத்தில் ஒரு ஊரில் ஒரு கழுதை இருந்தது. தன்னை விட அறிவாளி இந்த உலகில் வேறு யாருமே கிடையாது என்று அது இறுமாந்திருந்தது.

ஒரு பழத்தோட்டத்தினுள் ஒருநாள் அது புகுந்தது. உயரமான ஆப்பிள் மரங்களில் சிறிய அளவினதான ரேஸ் நிறமுடைய ஆப்பிள்கள் இருப்பதையும் அதே சமயம் பெரும் பெரும் பூசினிக்காய்கள் கீழே கொடியுடன் சேர்ந்து தரையில் கிடப்பதையும் அது பார்த்தது. திரும்பவும் ஆப்பிள்களையும் கீழே உள்ள பூசினிக்காய்களையும் பார்த்து அதிருப்தியுடன் முகத்தை ஆட்டியது.

“இந்த உலகில் எவ்வளவு அறிவீனமான முறையில் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன! எனக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்தால் விவேகியான நான் இவற்றை வேறு விதமாக அமைத்திருப்பேன்!” என்று அந்தக் கழுதை எள்ளிநகையாடியது.

இதன் வார்த்தைகள் உயரத்தில் மரத்தின் மீதிருந்த குருவி ஒன்றுக்குக் கேட்டது.

“கழுதையாரே! நீர் கூறுவது என்ன? தெரியவில்லையே! எந்த விஷயம் தவறுக அமைந்துள்ளது என்பதைத் தெரிவிப்பீரோ?” என்றது குருவி.

“நீயே பாரேன்! இந்தப் பெரும் மரங்களில் சிறு காய்களும் பெரும் காய்கள் இந்தக் கொடியிலும் அமைந்துள்ளதைப் பார்க்க மாட்டாயோ?” என்றது கழுதை.

“அது உரிய விவேகத்துடன் செய்யப்பட்டுள்ளது தானே?” என்றது குருவி.

“இதிலென்ன புத்திக் கூர்மை இருக்கிறது? பெரும் காய்கள் உயரிய மரத்திலும் சிறிய காய்கள் சிறிய கொடிகளிலும் இருப்பது தானே விவேகமான செயலாகும்?” என்றது கழுதை.

பிறகு, அந்தக் கழுதை ஒரு ஆப்பிள் மரத்தோடு தன் முதுகைத் தேய்த்தது. பொத்தென ஒரு ஆப்பிள் பழம் அதன் தலையில் வந்து விழுந்தது.

“ஐயோ என் தலை வலிக்கிறதே!” என்று கத்தியது கழுதை. குருவி இதைக் கண்டு உரக்கச் சிரித்தது.

“பாரத்தாயா ஆண்டவனின் விவேகத்தை? இந்தச் சிறிய ஆப்பிள் காய்க்குப் பதிலாக பூசினிக் காய்கள் போன்ற பெரும் காய்கள் உன் மண்டையில் விழுந்திருந்தால் உன்கதி இப்பொழுது என்னவாகியிருக்கும்? இதைத் தெரிந்து தான் எல்லாம் செவ்வனே செய்யக்பட்டுள்ளது.” என்றது குருவி.

“நீ சொல்வதிலும் கொஞ்சம் உண்மையிருக்கிறது” என்று கூறிக்கொண்டே கழுதை அங்கிருந்து சென்றது.

— சுவாமி சிவானந்தர் —

# பிறர் பொருள் எட்டி . . .

(சென்ற இதழ் தொடர்ச்சி)

— திருமுருக கிருபானந்த வாரியார் —

முதலில் பிறர் பொருளில் வைக்கும் அவாவை அகற்ற வேண்டும். பின்னர் தன் பொருளில் வைக்கும் பற்றை அகற்ற வேண்டும்.

"பற்றவா வேரொடு பசையறப் பிறவிபோய்
முற்ற வால் உணர்வு மேல் முடுகினுர்." — கம்பர்.
"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப்படும். — குறள்.
"அற்றது பற்றெனில் உற்றது வீடு" — நம்மாழ்வார்.

இந்த ஆன்றோர்களின் அமுத வாக்குகளைச் சற்றுச் சிந்தியுங்கள். உற்று உணருங்கள். ஆன்றோரின் அருள்வாக்கு அமுதம் போன்றது. நமக்கு நலம் பயப்பது. ஆன்றோரின் சொல் நமது அல்லலை அகற்ற வல்லது. அவா பிறப்பை உண்டாக்கும்.

குபேரன் சிவபெருமானுடன் தென்னுட்டில் விளங்கும் சிவத்தல யாத்திரை புரிந்தான். காவிரிநதி கடலுடன் சேரும் காவிரிப்பூம் பட்டினத்தை அடைந்தான். அங்குள்ள பல்லவனீச்சுரம், சாயாவனம் என்று புகழ் பெற்ற இரு சிவாலயங்களை தரிசித்து வழிபட்டான். அங்கே இயற்கை அழகும் செயற்கை வனப்பும் ஒருங்கே இணைந்து விளங்கும் காட்சியைக் கண்டு 'இங்கே இன்னும் இரண்டு நாள் இருந்து

**விவேகானந்தரின் வீரமொழிகள்**

**பலமின்மைதான் துயரங்களை உண்டாக்குகின்றது. நாம் பலவீனர்களாயிருப்பதால்தான் தீயவர்களாக இருக்கின்ருேம். நமது பலவீனத்திஞல்தான் நம்மிடம் பொய்யும் திருட்டும் கொலையும் வேறு பாவச் செயல்களும் குடிகொண்டுள்ளன. நம்மைத் துயருறச் செய்வது நம்மிடத்துள்ள பலவீனமே. நம்மைப் பலவீனர்களாக்க ஒன்றும் இல்லாதபோது நமக்குச் சாவோ துயரமோ இல்லை.**

மகிழலாம்' என்று எண்ணினன். எண்டோள் ஈசன் எண்ணு கின்ற எண்ணத்தில் இருக்கின்ருன். குபேரனைப் பார்த்து, "ஒரு எண்ணம் ஒரு பிறப்பைத் தரும். நீ இங்கிருந்து மகிழ எண்ணிணுய். ஆதலால் இத்தலத்திலேயே பிறந்து வாழ்ந்து வருவாயாக." என்று கட்டளையிட்டுக் கயிலைமலை சென்ருர் குபேரன் காவிரிப்பூம் பட்டினத்தில் சிவநேச குப்தருக்கும் ஞானகலைக்கும் மகனுகப் பிறந்து திருவெண்காடன் என்ற பெயருடன் விளங்கினன். இவர்தான் பரம ஞானியாகிய பட்டினத்தடிகள். ஒரு எண்ணம் ஒரு பிறப்பைத் தந்தது என்ருல் நாம் எண்ணுகின்ற எண்ணங்கட்கு எத்தனை பிறவி எடுக்க வேண்டுமோ ?

"ஒரு பொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல — திருக்குறள்.

மஹா பிஷக் என்ற ஒரு மன்னவன் இருந்தான். அவன் ஆயிரம் அசுவமேத யாகங்களும் நூறு இராஜசூய யாகங் களும் செய்தான். கோடி கோடி யாகத் தான தருமங்களைச் செய்தான். அப்புண்ணியத்தால் பிரமதேவருடைய அருகில் அமரும் பெரும் பேற்றைப் பெற்ருன்,

ஒரு நாள் பிரமதேவரை வணங்கும் பொருட்டு தேவர் களும் தேவமாதர்களும் சித்தர்களும் முத்தர்களும் வந்து குழுமினுர்கள். அந்தக் குழுவில் கங்கா தேவியும் வந்தாள். காற்றினல் கங்கையின் மேல் ஆடையானது சிறிது விலகிற்று. அங்குள்ள தேவர்கள் நிலம் நோக்கினுர்கள். மஹாபிஷக் என்ற மன்னவன் கங்காதேவியின் திருமேனியின் நலம் நோக்கினன்.

பிரமதேவர், "மஹாபிஷக்கே ! கங்கை தேவமாதா. அவ ளுடைய நலம் நோக்கிய குற்றத்தால் நீ மண்ணுலகில் பிறந்து சிலகாலம் கங்கையுடன் வாழ்ந்து வருவாயாக." என் ருர். பிரமலோகத்தில் இருந்து ஒரு பெண்ணை உற்றுப் பார்த்த பிழைக்கு அங்கிருந்து மண்ணில் பிறந்தான் என் ருல் நாம் மண்ணுலகில் இருந்து பிழை செய்தால் எங்கு. போக நேருமோ ? சிந்தியுங்கள்.

( தொடரும் )

# ★ ★ ★ குருபக்தி ★ ★ ★

(ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்)

கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள லிங்கம் சிரிக்கிறதா? அல்லது ஒன்றும் செய்யாமலிருக்கிறதா? என்று கூறமுடியாது. ஆனல் தக்ஷிணமூர்த்தியின் பிம்பத்தை எடுத்துக்கொண்டால் பால்யமாகவே இருக்கும். நல்ல களேயோடு சிரித்துக்கொண்டிருக்கும். சிரிப்பு சொட்டும், ஆனந்தமாகக் காணும். துக்கமே இராது. இளம் வயது. ஆனல் சடாமுடி மட்டும் பெரிதாக இருக்கும். உடலில் பால்யம். மந்தகாசத்துடன் தோற்றமளிக்கும். அவர் முன்னல் நான்கு சிஷ்யர்கள் கைகூப்பி நிற்பார்கள். அவர்கள் தங்கள் கஷ்டத்தைச் சொல்ல வந்திருப்பது போல இருக்கும்.

தக்ஷிணமூர்த்தியின் சொரூபத்தையே நாம் நிலேக்கச் செய்து கொள்ளவேண்டும். அப்போதுதான் நாமும் ஆனந்தமாக இருப்போம். சிறுவர்களாக இருக்கத்தான் எல்லோரும் விரும்புகிருர்கள். அதற்குத் தக்ஷிணமூர்த்தியை உபாசனே செய்யவேண்டும். நாமும் எப்போதுமே நிலேயான மந்தகாசத்தோடு இருப்போம். பால்யமாக இருக்க நிச்சிந்தையாக இருக்கவேண்டும். நாம் தூங்கும் சமயத்தில்தான் ஒன்றும் செய்யாமலிருக்கிறோம். அதனல்தான் எழுந்திருக்கும்போது தென்பு வளர்ந்து எழுந்திருக்கிறோம். நிச்சிந்தையாக இருந்தால்தான் பால்யமாக களேப்பில்லாமல் இருக்கலாம்.

தக்ஷிணமூர்த்தியை வணங்குவதுபோல விநாயகரை வணங்குவதும் மிக அவசியம். பல கவிகள் விநாயகரை மட்டுமேவணங்கியிருக்கிருர்கள். அம்பாவ், மாதா அம்பிகையை மட்டுமே பூஜை செய்து முத்தி அடைந்தவர்கள் பலர். எல்லாவற்றிற்கும் குரு வேண்டும். குருவுக்கு விசேடம் எப்போதும் உண்டு. பகவானேத் தியாகம் செய்து குருபக்தியை வளர்த்தால் சிறு வயதிலேயே பக்தி வளரும். ஈசனே உபாசிக்க குருவின் அருள் அவசியம்.

# பஜகோவிந்தம்

★ சங்கரர் ★

பாடிடுக பாடிடுக பரந்தாமன் மெய்ப்புகழை
பாடிடுக மூடமதியே!
பாடுவதில் தீர்ந்துவிடும் பழிபாவம் அத்தனையும்
பரந்தாமன் சொன்ன விதியே!
பாடுவதை விட்டுவிட்டு பாணினி இலக்கணத்தை
பற்றுவதில் நன்மை வருமோ?
பாய்விரித்த வேளைதனில் காலனவன் சந்நிதியில்
பாணினியம் காவல் வருமோ?
பாடிடுக பாடிடுக பரந்தாமன் மெய்ப்புகழை
பாடிடுக மூடமதியே!
பாடுவதில் தீர்ந்துவிடும் பழிபாவம் அத்தனையும்
பரந்தாமன் சொன்ன விதியே!

**அநுபவ முத்துக்கள்**

நான் யார் என்ற ஆத்ம விசாரணையே மோட்சத்தைக் கொடுக்கும். இதுவே சர்வதுக்க நிவிர்த்திக்கும் பரமானந்த பிராப்திக்கும் முக்கிய ஏதுவாகும்.

— ரமணர்

சொந்தமிது சொந்தமென
சொத்து சுகம் சேர்ந்துவிட
தொலையா தெழுந்த மோகம்
தொத்திவரு நோயதனை
புத்திவழி வெல்லுவது
தூயவர்கள் செய்யும் யாகம்
சந்ததமும் பாடுபடு வந்தவரை
நிம்மதிகொள்
தங்குவது தெய்வ யோகம்
தத்துவம் இதற்கு ளொரு
தன்னமைதி தோன்றிவிடும்
சாகும் வரை இன்பராகம்.

அந்தமில்லை ஆதியில்லை என்றபடி நின்றுலவும்
அண்ணலடி பற்றுதினமே!
ஐயனவன் மெய்யனவன் ஆயர்குல நேயனவன்
அன்னவனைப் பாடுமனமே!

தமிழில்: கண்ணதாசன்.

# மனதை அமைதிப்படுத்துவது எப்படி ?

(ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தர்)

மனதை அமைதிப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல. மனதை அதன் இஷ்டம் போல் திரியவிடாமல் ஒரு குறிக்கோளை நோக்கி அதை இயங்கச் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாகத் தான் மனதை அமைதிப்படுத்த முடியும்.

**விவேகானந்தரின் வீரமொழிகள்**

எல்லா விலங்குகளிலும் எல்லாத் தேவ தூதர்களிலும் மனிதனே உயர்ந்தவன். மனிதரிலும் உயர்ந்தவர் எவருமில்லை. தேவரே யாயினும் மீண்டும் கீழே வந்து மனித உடல் வாயிலாக முத்திபெற வேண்டியவரே. மனிதனால் மட்டுமே பூரணமெய்தல் இயலும். அஃது தேவராலும் இயலாது.

நம்முடைய புலன்களாலும், உடம்பாலும் சூழ்நிலையாலும் மனதை அமைதி பெறச்செய்ய முயலவேண்டும். சில சமயங்களில் நமது உடம்பின் இயக்கங்களையும் உணவையும் பேச்சையுங் கட்டுப்படுத்துகிறோம்.

நமக்குத் தூல உடம்பும் சூக்கும உடம்பும் இருக்கிறது. படிப்படியாக நாம் நமது தூல உடம்பிலிருந்து சூக்கும உடம்புக்குள் செல்ல வேண்டும். யோகத்தின் முக்கியமான நோக்கம் மனதை ஒரு நெறிப்படுத்தி நல்ல வழியில் இயங்கச் செய்வது தான். இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மனதைத் தூய்மையாகவும் நேர்த்தியாகவும் இயங்கச் செய்ய வேண்டும். இதன் மூலமாகத்தான் நம் முன் இருக்கும் உள் ஒலியை. தெய்வ ஒளியை போதுமான அளவு பிரகாசிக்கச் செய்ய முடியும்.

மனம் அமைதியை இழக்கும் போதும் தன்னுடைய இஷ்டம் போல அது தொடர்ந்து திரிந்து கொண்டிருக்கும் போதும் அதனால் நம் உள் ஒளியின் பிரதிபலிப்பைப் பெறமுடியாது.

மனம் தூய்மையான கண்ணாடிபோல் இருக்கவேண்டும். அப் போதுதான் அது உள் ஒளியின் பிரதிபலிப்பைப் பெறும். அந்தப்

பிரதிபலிப்பு நேராக வந்து நம் உணர்வுகளைத் தழுவும், அப் போது நம் உணர்வுகள் தூய்மை பெறும்.

இதற்கு மனம் முதலில் அமைதி பெறவேண்டும், மனதை அமைதி அடையும்படி செய்வதை நம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். நம்மிடம் இருக்கும் பழக்கமான எண்ணங்களை நாம் அடக்கவேண்டும். அவற்றை நம் ஆளுகைக்குள் கொண்டு வரவும் வேண்டும். இவற்றில் வெற்றி பெற்றால் புதிய புதிய எண்ணங்களை நாம் உருவாக்கலாம்.

இந்த இணையற்ற மாற்றத்தினால் நம் மனம் மகத்தான ஆற்றலைப் பெற்றுவிடும். அது நாம் விரும்பியதை நிறைவேற்றும் சக்தி வாய்ந்த நம்முடைய கருவியாகவும் ஆகிவிடும். நம் மனதை புனிதமாக வைத்துக் கொள்வோம். அப்போது உலக மக்கள் எல்லாரும் தம்முடைய நேய உறவாக மாறி விடுவார்கள்.

மனதை அமைதிப்படுத்தும் ஒப்பற்ற கலையில் நாம் முதலில் வெற்றிபெற வேண்டும். அதில் நிலைபெற்று நிரம்பவும் வேண்டும் அப்போதுதான் நம்மால் புதிய புதிய எண்ணங்களைப் படைக்க முடியும். சிலர் எண்ணுவது போல எந்தச் சிந்தனையும் இன்றி மனதை வெறுமையாக்கிக் கொள்வதால் ஒரு பயனும் ஏற்படாது.

சிந்தனையற்ற மனதிற்கும் உணர்ச்சியற்ற ஒரு கல்லுக்கும் எந்த வேறுபாடும் இருக்க முடியாது. சிந்தனையற்ற மனதையுடையவர்கள் உணர்ச்சியற்ற கல்லுக்குச் சமம் ஆவார்கள். எனவே கல் நிலையைக் கடந்து சிந்திக்கும் நிலைக்கு மனிதன் உயர வேண்டும். புதிய புதிய எண்ணங்களைப் படைத்து உயிர்ப்பணி செய்யவேண்டும். இதையும் பொறுப்புடன் செய்யவேண்டும். பல வகையான பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றவும் தயாராக இருக்கவேண்டும்.

புதிய புதிய எண்ணங்களைப் படைத்து உயிர்ப்பணி செய்யும் வகையில் மனதை நெறிப்படுத்தவேண்டும், இதில் வெற்றி அடைந்தால் பலவகையான பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு மனித குலத்திற்குப் பெரும்பணி ஆற்றமுடியும்.

மனதில் அமைதி ஏற்பட்டு அது நெறிப்பட்டவுடன் நாம் சும்மா இருக்கக்கூடாது. உயிர்களுக்குப் பணிசெய்யவேண்டும். அப்போது உயிர்களுக்குப் பணிபுரியும் உயர்ந்த எண்ணங்கள் மட்டுமே நம் உள்ளே எழுந்து நமக்கு வழிகாட்டும். அவை தன்னலமற்ற தன்னலமற்ற எண்ணங்களாகவும் இருக்கும். தன்னலமற்ற எண்ணங்கள் நம்மிடம் எழும்போது நமது மன அமைதியைச் சிறிதும் பாதிக்காது.

உயிர்ப் பணிக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் எதற்கும் கவலைப்பட மாட்டார்கள். வீணாக ஏங்கிக்கொண்டும் இருக்கமாட்டார்கள். மன அமைதியை இழந்து விடவும் மாட்டார்கள்.

அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியுடனும் குதூகலத்துடனும் இருப்பார்கள். யோகத்தின் இலட்சியம் என்ன? தன் உண்மைத் தன்மையை மறந்து உறங்கிக் கிடக்கும். மனத்தை விழிப்படையச் செய்வதுதான். ஏதையாவது செய்து அதன் மூலமாக இன்பம் அடைய மனம் முயன்று கொண்டிருக்கிறது. மனம் தன் உண்மைத் தன்மையை மறந்து இஷ்டம் போல் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

வெறும் புலன் இன்பங்களையே நிறைவேற்றும் செயல்களில் மனம் தன் மகத்தான சக்தியை விரயம் ஆக்கிக்கொண்டிருக்கிறது அதில் இருந்து மனத்தை விடுவிப்பதுதான் யோகத்தின் நோக்கமாகும். புலன் இன்பங்களில் மனம் பதியாமல் இருப்பதற்கு என்ன செய்யவேண்டும்? அதைப் புலன் இன்பங்களுக்கு நேர் மாறாக செயலில் ஈடுபடுத்தி ஆகவேண்டும்.

இன்றே இப்போதே செய்து தீர்க்க வேண்டிய உயர்ந்த குறிக்கோளை நோக்கி மனதைத் திருப்பவேண்டும். இதில் தீவிரமாகவும் மனதை ஈடுபடுத்த வேண்டும். அந்த உயர்ந்த குறிக்கோளை நிறைவேற்றும் வழியில் மனதை ஈடுபடுத்திப் பழக்கவேண்டும்.

யோகப் பயிற்சிகள் எல்லாம் வெறும் புலன் இன்பங்களை நிறைவேற்றுதற்காகச் செய்து கொண்டிருக்கும் சிக்கலான செயல்களிலிருந்து மனதை விடுவிப்பதுதான், பழக்கமான அடிமைத் தளத்திலிருந்து மனதுக்கு விடுதலை கொடுப்பதுதான் தன்னலப் பற்றிலிருந்து உயிர்ப்பணிப் பற்றுக்கு மனதை உயர்த்துவதுதான். இவற்றின் மூலமாக மனதின் தன்மையை மாற்றி அதை நெகிழச் செய்வதுதான்.

( தொடரும் )

திருமுறைச் செல்வம்

# ★ தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே ★

அண்ணுமலையைத் தொழுபவர்களுடைய வினைகள் வேருடன் தொடர்பற்றுப் போகும் என்பது சம்பந்தர் வாக்கு. இறைவன் சோதிப் பிழம்பாக நின்ற தலம் திருவண்ணுமலையாகும்.

பிரமவிட்டுணுக்கள் தம்முள்ளே மாறுபட்டு நீண்டகாலம் போர் புரிந்தும் உண்மைப் பொருளை அறிந்தாரில்லை. அவர்களுடைய அறியாமையாகிய இருளை அகற்றி ஞானச்சுடர் கொளுத்த விரும்பின இறைவன், இருவருக்கு மிடையில் சோதிப் பிழம்பாகத் தோன்றினன்.

சோதி தரிசனம் பெற்ற உடனேயே இருவரது சண்டையும் ஓய்ந்தது. எம்மில் யார் வல்லவர்கள்? என்பதைக் கூறவேண்டுமென இருவரும் வேண்டினர். சோதியின் அடியையும முடியையயும் யார் காண்கின்றனரோ அவாகளே வல்லவர் என்று சோதி கூறியது.

சோதி தரிசனத்தினுல் புற இருள் நீங்கியதே தவிர அக இருள் நீங்கவில்லை. விஷ்ணு அடியைத் தேடிப் பன்றி உருக்கொண்டு சென்ருர். பிரமா முடிவைத் தேடி அன்னப்பறவை உருக்கொண்டு சென்ருர். அடியைத் தேடிச் சென்றவருக்கு அகங்காரம் தேய்ந்தது. அதனுல் தமது ஆற்றுமையை உணர்ந்து தோல்வியை ஒப்புக் கொண்டார் விஷ்ணுமூர்த்தி.

> **சங்கரரின் பொன்மொழிகள்**
>
> **அஞ்ஞானம்**
>
> ஒரு தூண் ஆள் என்று நன்ருய்க் கருதப்படுவது போலுல், கானல், நீர் என்று கருதப்படுவது போலும், அஞ்ஞானியால் உடல் ஆத்மா எனக் கருதப்படுகிறது.

நாமும் திருவடியை நோக்கியே யாத்திரை செய்து கொண்டிருக்கிருேம். அதனுல் நாம் எல்லாருமே திருவடி யாத்திரைக்காரர் என்ற பெயரைப் பெறுகின்ருேம். மானிடப் பிறப்பின் குறிக்கோள் இறைவன் திருவடியாகும். திருவடியே ஞானம். திருவடியே முத்தி. இதனையே அப்பர் சுவாமிகள், "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்றுர்.

பிரமதேவருக்குத் தோல்வியை ஒப்புக்கொள்ள முடியவில்லை. அதனால் குறுக்கு வழியை நாடினார். அந்தக் குறுக்கு வழிக்கு இருவர் பலியாகினர். தாழம்பூ பொய் சொன்னபடியினால் அதுவும் மனமறிந்த பொய் சொன்னபடியினால் மும்மூர்திகளில் ஒருவரான பிரமாவுக்குக் கோயிலே இல்லை. தென்னிந்தியாவில் ஸ்ரீ மகா விஷ்ணுவுக்கு பத்தாயிரம் கோயில்கள் வரை உண்டு. சிவனுக்கு பதினையாயிரம் கோயில்கள் வரை உண்டு. பிரம்ம தேவருக்கே இந்தக் கதியானால் பூவுலகில் அகங்காரம் கொண்ட மன்னர்களுக்கு சரித்திரத்திலேயே இடமில்லாமற் போய்விடுகின்றது.

பிரம விட்டுணுக்களுக்கு ஞானச்சுடர் கொழுத்திய இடம் திருவண்ணாமலையாகும். அதுபோல திரு அண்ணாமலை அருணாசலேஸ்வரரைத் தொழுபவர்களுக்கும் வினை அற்றுப் போகின்றது. நிச்சயமாக வினை அறும் என்பது ஞானசம்பந்தப் பெருமானுடைய அநுபவமாகும்,

திருவண்ணாமலைப் பெருமானைக் குறிப்பிட்ட மணிவாசகப் பெருமான் "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி" என்கின்றார், ஜீவன் முக்தராகத் திகழ்ந்த ரமண மகரிஷிகள் 'அருணாசலா' என்ற சொல்லைக் கேட்ட மாத்திரத்தே பந்தம் எல்லாம் அறுந்து திருவண்ணாமலைக்கு ஓடோடியும் வந்தார்.

மானிடரில் ஒத்த அன்புடைய இருவரைக் குறிப்பிடும் போது ஈருடலும் ஒருயிரும் என்று குறிப்பிடுவார்கள். உமாதேவியார் சிவனின் இடப்பாகத்தைத் தமதாக்கிக் கொண்டபின் ஒருடலாகவே ஆகிவிட்டார். அதுவே அர்த்த நாரீச்சுரர் வடிவமாகும். சிவ சக்தி என்று பெயரால் இரண்டாயினும் பொருளால் ஒன்றே என்பதை இது விளக்குகின்றது, இதனைச் சம்பந்தர்,

"பெண்ணாகிய பெருமான்" என்று குறிப்பிடுகின்றார்.

மலையிலிருந்து விழும் அருவியின் ஓசை மத்தள ஓசைபோல் கேட்கின்றது. சம்பந்தப் பெருமான் மூன்றும் வயதிலேயே பண்ணோடு தாளம் பொருந்த தேவாரம் பாடத் தொடங்கியவர். அவரது தேவாரத்தைப் பாடுவோருக்கு மத்தள ஒலிபோல ஒரு இசை

கேட்பதை உணரலாம். இவற்றையெல்லாம் அநுபவித்த ஞான சம்பந்தப் பெருமான் பின்வரும் தேவாரத்தைப் பாடுகின்றார்;

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவா வண்ணம் அறுமே.

பொருள் : உண்ணாமுலை அம்மையாராகிய பார்வதி தேவியரொடும் கூட ஒன்றாக எழுந்தருளியுள்ள ஒப்பற்றவன் ஆன - பாதித் திருவுருவம் – பெண்ணாக உள்ள பெருமானுடைய மலையாகிய தம்மிடத்திலே சிறந்த அழகிய இரத்தினங்கள் விளங்கத் தரையில் விழுகின்ற அருவிக் கூட்டங்கள் இனிய மத்தள ஓசைபோல ஒலிக்கின்ற திருவண்ணாமலையை வணங்குபவர்களுடைய வினைகள் வேருடன் தொடர்பற்றுப் போகும்.

---

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## பகவான் இராமகிருஷ்ணரும் காளியும் . . .

(அண்ணா சுப்பிரமணியம்)

இங்ஙனம் சோதனைசெய்தபின் பவதாரிணி அவருக்குக் காட்சி அளித்தாள். அதைப்பற்றி இராமகிருஷ்ணர் பின்வருமாறு கூறியுள்ளார். " ஒருநாள் தாங்கொணாத் துயரம் என்மனதை வாட்டியது ஈரத்துணியை இறுக்கிப் பிழிவதுபோல் என் இதயத்தை யாரோ பிழிவது போன்ற உணர்ச்சி. தேவியின் கையிலிருந்து கத்தியை எடுத்துப் பைத்தியக் காரனைப்போல் என் உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணினேன்.

அப்பொழுது என் கண்முன் இருந்த விக்கிரகமும் கோயிலும் மற்றெல்லாமும் சுழன்று சுழன்று மறைந்து போயின. சிதானந்தக் கடல் ஒன்று பொங்கி வருவது போலிருந்தது, அதன் அலைகள் என்மேல் பாய்ந்து என்னை விழுங்கிவிட்டது. நான் மூர்ச்சையானேனோ, என்ன வானேனோ தெரியாது. எனக்குள்ளே அளவிலா ஆனந்தம் ஊற்றெடுத்தது. அன்னையை நான் கண்டுகொண்டேன். இது என் முதல் அநுபவம்.

உ

சிவமயம்

# கணபதி பஜனை

தொந்திக் கணபதி வா வா வா
வந்தே ஒருவரம் தா தா தா.

ஆனை முகத்துடன் வா வா வா
அவசியம் ஒருவரந தா தா தா.

பானை வயிற்றுடன் வா வா வா
பணிந்தேன் ஒருவரம் தா தா தா.

எல்லாம் அறிந்த கணபதியே
எவ்வரம் கேட்பேன் தெரியாதா ?

நல்லவன் என்னும் ஒருபெயரை
நான்பெற நீவரம் தா தா தா.

★ ★ ★ ★ ★

சிவசிவ கஜமுக கணநாதா
சிவகண வந்தித குணநீதா.

வாவா வாவா அங்குசபாசா
வந்தருள் இன்பம் தந்திடுநேசா.

உமைதரு பாலா குருமணியே
உந்த னடைக்கலம் அடியோமே.

மகா கணபதே குருசரணம்
மனம் மகிழ்ந்து வந்தருள் சரணம்.

சரணம் சரணம் தந்திமுகா
சரவண பவனுக்குயர் துணைவா.

உ
சிவமயம்

# பகவான் ரஜனீஷ்

( திரு. பி. குமார் )

பகவான் ரஜனீஷ் ஆன்மீகத்துறையில் உலக சாதனை படைத்தவர். இவர் இருபதாம் நூற்றாண்டு மக்களை உலுக்கி இப்போதே அடுத்த நூற்றாண்டுக்கு கொண்டுசெல்லத் துடிப்பவர்.

உலகம் முழுவதும் இவருக்கு ஐந்து லட்சம் சீடர்கள் இருக்கின்றார்கள். சீடர்களும் சாதாரணமானவர்கள் அல்ல. தொழில் விஞ்ஞானம், மருத்துவம், அரசியல் முதலிய பலதுறைகளில் முன்னணியில் உள்ளார்கள். ரஜனீஷை குருவாகக் கொள்ளநாடி வந்துள்ளனர்.

1931 டிசம்பர் 11-இல் மத்திய பிரதேசத்தில் ஜபல் பூருக்கு அருகேயுள்ள 'கச்வாடா' என்ற கிராமத்தில் சைனப் பிரிவைச் சேர்ந்த பெற்றோருக்குப் பிறந்த ரஜனீஷ் இப்போது ஆசியா ஆபிரிக்க, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஐரோப்பிய கண்டங்களில் பலநாடுகளில் உயர்ந்த நிலைகளில் உள்ள சீடர்களைப்பெற்ற குருவாக விளங்குகிறார்.

இவரைச்சுற்றி சர்ச்சைகள் எழுப்பப்பட்டாலும் இவருடைய சிறப்புகளை மறுக்கமுடியாது. இவருடை பேச்சுக்களும், கட்டுரைகளும் 400 புத்தகங்களாக 18 மொழிகளில் வெளியிடப்பட்டு 50 லட்சம் பிரதிகள் விற்பனை ஆகிஉள்ளன.

ரஜனீஷ் ஜபல்பூர் பல்கலைக் கழகத்தில் பட்டமும், சவுகார் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றவர். மகாகவுசல் கலைக்கல்லூரியில் இவர் விரிவுரையாளராகவும் பணியாற்றி உள்ளார். தத்துவங்களைப் போதித்த ரஜனீஷ் உபனிஷத்துக்களையும் பிராய்ட், லாவோட்ஜூ, புத்தர், மகாவீரர் முதலியோரின் போதனைகளையும், இந்து, இஸ்லாமிய, கிறிஸ்துவ மதத்தத்துவங்களையும் ஆழமாக அலசினார்.

ஜபல்பூரில் உள்ள பன்வர்தலால் பூங்காவிலுள்ள மல்சாரி மரத்தின் அடியில் ரஜனீஷ் அடிக்கடி அமர்ந்து தியானம் செய்தார். கௌதம புத்தர் போதி மரத்தின் அடியில் ஞானம்பெற்றதுபோல ரஜனீஷ் இந்த மல்சாரி மரத்தடியில் ஞானம்பெற்றதாகக் கூறப்படுகிறது. இந்த மரம் இப்போதும் உள்ளது. இதில்

நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டியது ரஜனீஷ்ன் தனித்தன்மையைப் பற்றியே ஆகும், இவர் வேதங்கள் கூறுவதையும், மற்றமதங்களை நிறுவியவர்கள் கூறியதையும் அப்படியே திரும்பச் சொல்கிறவா அல்ல.

ரஜனீஷ் தன்னுடைய சொந்த சிந்தனையால் இந்த நூற்றூண்டு மக்களின் பிரச்சனைகளை அலசி. அவர்களின் தினசரி வாழ்க்கையை சிறப்பாக ஆக்கவும், அடுத்த நூற்றூண்டுக்குள் நுழையும்போது பெரிய பிரச்சனைகளில் இருந்து விடுபட்டநிலை ஏற்படவும் புதிய பாதைகளைக் காட்டியுள்ளார்.

1970-இல் இருந்து சீடர்களை ஏற்று சன்னியாசம் தரத்தொடங்கிய ரஜனீஷ் ஆன்மீக புரட்சியை உலக அளவில் 11 ஆண்டுகளில் செய்து காட்டினர். 1971-இல் புனேநகரில் 4 ஏக்கர் நிலத்தில் ரஜனீஷ் ஆச்சிரமம் தொடங்கப்பட்டது.

1981-இல் அமெரிக்காவில் ஆரகன் பகுதியில் 64 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உலகிலேயே சிறந்த எல்லா வசதிகளும் கொண்ட ரஜனீஷ்புரம் நிறுவப்பட்டது. இது அவரின் தத்துவப் புரட்சி பரவியவேகத்தைக் குறிப்பது ஆகும். இங்கு உலகின் எல்லா நாடுகளையும் சேர்ந்த ஐயாயிரம் சீடர்கள்வந்து தங்கினர்கள். இவர்கள் சமுதாயத்தின் மேல்மட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

ரஜனீஷுக்கு அன்பளிப்பாகவே உலகிலேயே விலை உயர்ந்த 92 ரோல்ஸ்ராய்ஸ் காரகளைச் சீடர்கள் வழங்கினர்கள். இந்திய சாமியாரான ரஜனீஷின் வளர்ச்சி அமெரிக்காவையே அதிரவைத்தது.

மேல்நாடுகளில் இந்து மதத்திற்கு ஓரளவு வரவேற்பு உண்டு விவேகானந்தர் அமெரிக்காவில் சிக்காகோ நகரில் நிகழ்த்திய பிரசங்கத்தைக் கேட்டுத்தான் ராக்பெல்லர் உலகிலேயே பெரிய தான 'ராக்பெல்லர்.' கொடைநிறுவனத்தை அமைத்தார். இது வழங்கிய நிலத்தில்தான் ஐக்கிய நாடுகள்சபை இயங்குகிறது.

லண்டனிலும் ராமகிருஷ்ண மடத்திற்கு இங்கிலாந்து அரச குடும்பத்தினர் வருவது உண்டு, இளவரசர் சார்ல்ஸ் இந்து தத்துவங்களில் பற்றுள்ளவர். மரணம்பற்றி இந்திய தத்துவத்தை மதிப்பதாக சார்ல்ஸ் கூறிஉள்ளார்.

ஆனாலும் இந்துமதத்தைப் பரப்புவதில் சிலபிரச்சனைகள் உள்ளன. ஜனநாயக நாடான பிரான்சில்கூட பலஇடங்களில் புதிதாக

இந்து மதத்தில் சேர்ந்துள்ள பிரெஞ்சுக்காரர்கள் பகிரங்கமாக இந்து ஆலயங்களுக்குச் செல்வதில்லை. யோகநிலையங்களை ஏற்படுத்தி அங்குமட்டுமே கூடுகிறார்கள் அங்கு இந்துமதம் பரவ சில தடங்கல்கள் உள்ளன.

அமெரிக்காவில் ரஜனீஷ் அங்கு வேரூன்றியுள்ள மதத்துடன் மோதியதால் எதிர்ப்பையும் தேடிக்கொண்டார். ரஜனீஷ் மத வெறியரல்ல. அவர் எல்லா மதங்களிலும் உள்ள உண்மைகளை ஒப்புக்கொண்டவரே. ஆனாலும் மற்ற மதத்தலைவர்களிடம் குறைகளைக் கண்டால் பகிரங்கமாகவே எடுத்துக்கூறுவார்.

உலகில் எங்கும் இல்லாத அளவில் மத்திய குளிர்வசதியுடன் ஆச்சிரம நகரம் அமைக்கப்பட்டதோடு இதற்கென்று நகரசபையும், காவல்படையும் உருவானது, அவரை அமெரிக்காவிலேயே நீடித்து இருக்கவிட்டால் மாபெரும் சக்தியாகவே வளர்ந்து விடுவார் என்ற அச்சத்தைத் தோற்றுவித்தது. இதனால் ரஜனீஷ் சாமியாருக்கு பல தொல்லைகள் தரப்பட்டு அவர் இந்தியாவுக்குத் திரும்பியுள்ளார்.

ரஜனீஷ் சுவாமியாரின் தனித்தன்மை எதிலுள்ளது? பலதுறைகளில் உலகம் முழுவதும் மேல்மட்டத்திலுள்ள ஐந்து லட்சம் சிடர்கள் வேறுஎதிலும் காணாத எதை ரஜனீஸின் போதனைகளில் கண்டார்கள்? மற்றவர்கள் கூறாத எவற்றை ரஜனீஷ் கூறினார். ஏற்கனவே உள்ள தத்துவங்களையும் ரஜனீஷ் புதியகோணங்களில் பார்த்து புதிதாகக் கூறியவை என்ன? இவற்றை அலசிப்பார்த்தால் மனதைப் புதுப்பிக்கவும், வாழ்க்கைக்குப் புதிய இரத்தம் ஊட்டவும் பயன்படத்தக்க பலவற்றை அவர்கூறி உள்ளது தெரியும்.

ரஜனீஷ் சாமியார் மனோதத்துவம், மனோவசியம் முதலியவற்றை ஆழமாக அறிந்தவர். பல அரிய தத்துவங்களை. மனதின் தன்மைகளை அனுசரித்து ஆழமாக விதைக்க வழிகாட்டியுள்ளார். இதனால் மனதின் அடித்தளத்திற்கும் கீழே பாயத்தக்க அளவில் தத்துவ வித்துக்களுக்கு ரஜனீஷ் சாமியார் முளைசிவி போதனை செய்வதால் இவை கேட்பவர் உள்ளத்தில் மிக ஆழமாக இறங்கி பதிந்து வேர்விட்டு வளர்ந்து பலன்விளைவிக்கும் வகையில் உள்ளன.

வேறுசிலரும் நல்லதத்துவங்களைக்கூறி இருக்கலாம். ஆனால் அவை பூமியின் மேற்பரப்பில் தூவப்பட்ட விதைகளைப்போல முளைக்காமலே கிடந்து காலப்போக்கில் உயிரிழந்து விடுவதைக் காணலாம். மனதில் இறங்காமல் வெறும் எண்ணங்களாகவே முளைக்காமல் நின்றுவிடும். தத்துவங்களுக்கும் நூல் நிலையங்களில் படிக்காமல் விடப்படும் புத்தகங்களுக்கும் வித்தியாசம் இல்லை என்பது ரஜனீஷ் சாமியாரின் கருத்து ஆகும்.

# மனித மேம்பாட்டுக் கல்வி

( ஆத்மஜோதி நா. முத்தையா )

தற்போது மனிதமேம்பாட்டுக் கல்வியென்ற சொற்றொடர் எல்லார் நாவிலும் உச்சரிக்கப்படுவதை நம்மால் காணமுடிகிறது அதுவும் இளைஞர்களுக்கு ஆறுவயது தொடக்கம் பதினாறுவயது வரை உள்ள இளைஞர்களுக்கு மிகமிக அவசியமானது என்று கல்விமான்கள் கூறுகின்றார்கள். எதிர்காலச் சந்ததியினராவது அமைதி, சாந்தம் என்பவைகளை அநுபவிக்க வண்டும் என்பது அவர்களது ஆசையாகும்.

இது இன்றுதான் பேசப்படுகின்றதோ என்றால் அப்படியன்று உலக நாகரீகம் பெறத்தொடங்கிய காலம்தொட்டுப் பேசப்பட்டு வருகின்றது. வள்ளுவர் தனது குறளில் இரண்டாவதாக

" கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅர் எனின் " என்பதைக் கூறுகின்றார்.

தூய அறிவாக இருக்கின்ற பகவானுடைய நன்மை பயக்கத் தகுந்த பாதங்களை வணங்கமாட்டார் என்றால் அவர்கள் கல்வி கற்றதனால் அடைந்தபலன் என்னவோ தெரியவில்லை என்பது பொருள். நன்றாகப் படித்தவர்களாக இருந்தும் அறிவுக்கெல்லாம் அறிவாக இருக்கின்ற பகவானுக்கு வணக்கம் செலுத்த மறுக்கின்றவர்களும் இருக்கின்றார்களே! அவர்கள் படித்த படிப்பு என்னபடிப்பு?

கல்வி கற்பது அறிவுக்காக நாம் எவ்வளவு கல்வி கற்றாலும் அதிலிருந்து அறிந்துகொண்ட அறிவுக்குமேல் இன்னும் அறிய வேண்டிய அறிவு இருந்துகொண்டே இருக்கிறது. அந்த அறிவின் எல்லை எங்கே முடிகிறது என்று நாடுகின்றபோது அது நாமறிந்த அறிவுக்கு எட்டாததாக இருக்கிறது. ஆகவே நாம் அறிந்து கொள்ளமுடியாத அறிவு இருந்துகொண்டே இருப்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. நம் அறிவுக்கு எட்டாத அந்த அறிவின் பூரணத்தைத்தான் வாலறிவன் என்றும் பகவன் என்றும் சொல்லுகிறோம். அந்தப் பகவான் என்ற பூரண அறிவிற்கு மிக மிகவும் குறைந்ததுதான் நம்முடைய அறிவு என்பதை ஒப்புக் கொள்ளாவிட்டால் நாம்கற்ற கல்வியின் பயன் என்னவோ? ஒப்புக் கொண்டால் அதற்கு வணங்கவேண்டும்.

இதனை மணிவாசகர்

" இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறியவாகப் பெரியோன் "

என்று கூறுகின்றார். வீட்டுக்குள் காற்றில் மிதந்துகொண்டிருக்கிற தூசிகள் போன்றவை பூமி, சந்திரன், சூரியன் முதலிய கோளங்கள். தூசிகள் நமக்கு அற்புதமானவையாகத் தோன்றுவது

போன்று இறைவனுக்கு அண்டகோடிகள் அற்பமானவைகளாம் இறைவனைப்பற்றிய பேருணர்வு வரும்போதுதான இறைவனைப் பற்றிய பெருமையை அறியமுடியும்.

மனிதனை மேம்படுத்துவது ஆத்மீக உணர்வும், ஆத்மிகக் கல்வியுமாகும். நாம் எதை அறிந்துகொண்டால் எலலாம அறிந்ததாகுமோ அதுதான் ஆத்மா என்பது. தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான். ஒருமுறை தேவர் உலகத்தில் யாழ்பகவான் மேற்கூறிய கருத்தைச் சொன்னார். இதனைக் கேள்வியுற்ற தேவர்கள் தமது சார்பாக தேவேந்திரனையும், அசுரர் சார்பாக விரோசனனையும் அனுப்பிவைத்தனர். விரோசனன் இந்த உடம்புதான் ஆத்மா என்றும இதனைப் போஷிக்கும் அளவிறகு நீங்கள் நன்மை பெறுவீர்கள் என்றும் கூறினன் தேவேந்திரன் பலகாலம் யாழ பகவானோடு உடனுறைந்து. ஆத்மீக உணர்வைப்பெற்றுத் தேவர்களுக்குக் கூறினன். இதனைக்கேட்ட தேவர்கள் உய்ந்தனர்.

ஆனல் விரோசனனிடம் அசுரபுத்தி தொழிற்பட்டதுபோன்று நம்மிடமும் அசுரபுத்தி தொழிற்படுகின்றது. அதனல உடம்பு தான் சாசுவதமானது என்று கருதி வாழ்நாள் முழுவதையும் உடம்பிற்காகவே செலவிட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆத்மாவைப்பற்றி சிறிதும் சிந்தியாதவர்களாய் தினமும் ஆத்மாவைக் கொலைசெய்து கொண்டிருக்கின்றோம். பட்டமும் பதவியும், பணமும் புகழும் ஆத்மாவை மேமபடுத்துவதில்லை. பக்தி ஒன்றினலே தான் ஆத்மீக மேம்பாட்டை நாம் உணரமுடியும்.

கல்விகற்கும் சிறார்களுக்கு ஏழு வயதுக்கும் பதினறு வயதுக்கிடையில் மனிதமேம்பாட்டுக்கான ஆத்மீக கல்வியைப் புகட்ட வேண்டும். சமயபாடத்தை முக்கியபாடமாகக் கற்பிக்க இலங்கையில்தான் காரணமில்லாத கொலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. காரணம் ஆத்மீகத்தை அறிந்தவர்களாலோ அன்றி அதனைச் சாதனைப்படுத்துகிறவர்களாலோ பாடசாலைகளில் போதிக்சப்படுவதில்லை. விபூதியில் நம்பிக்கையில்லாத ஆசிரியா விபூதியைப் பற்றிப் படிப்பிக்கின்ருர். மாணவன் கேள்விகேட்டால் எனக்கு உதில் எல்லாம் நம்பிக்கை இல்லை. பரீட்சையில் சித்தியடைய வேண்டுமானல் அதனைப் பாடமாக்கி எழுது என்கிருர்.

பாடசாலையிலேயே ஆன்மீக உணர்வு கொலைசெய்யப்பட்டுவிட்டது. இன்றைய இளைஞர்களின் நிலைமைக்கு ஆசிரிய சமுதாயமே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். பிரான்சில் ஒருகாலத்தில் ஒருசட்டம் இருந்தது, அதாவது ஒருவன் இன்னெருவனைக் கொலைசெய்தால் கொலைசெய்தவனைப் படிப்பித்த ஆசிரியரே அத்தண்டனையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது தான் அந்தச்சட்டமாகும். இந்தச்சட்டம் நம் மத்தியில் அமுலாக்கப்பட்டால் எத்தனை ஆசிரியர்கள் உயிரோடிருப்பார்கள் என்பதை இறைவன் ஒருவரேதான் அறிவார்,

சமயபாடத்திலும். பிழையில்லை; மாணவர்களிலும் பிழை இல்லை, கற்பித்தவர்களில்தான் முழுப்பிழையுமாகும். இன்றைய நிலையில் மக்கள் உள்ளம் பண்பட சமயம் அவசியம். சமய உண்மைகள் மக்கள் இரத்தத்தில் ஊற சமயசாதனை அவசியம்.

# எமது ஆயுட் சந்தாதாரர்

1 திரு. வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை, ஜே. பி.
(அறங்காவலர், ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவில்)
2 திரு. ரி. செந்தில்வேள், ஜே. பி.
(தலைவர், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில், கொழும்பு)
3 திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியார்
(அறங்காவலர், புதிய கதிரேசன் ஆலயம், கொழும்பு)
4 திரு. நா. சு. தெய்வேந்திரன் (கோமதி விலாஸ், கொழும்பு)
5 வெலிகம ஸ்ரோர்ஸ் (4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு)
6 திரு. கோ. செல்வபதி (மருதநகர், கிளிநொச்சி)
7 திரு. ப. சுப்பையா (இதா ரெக்ஸ், கொழும்பு)
8 திரு. ஆர். கிருஷ்ணன் (விவேகானந்த ஹில், கொழும்பு)
9 திரு. பி. கருப்பையா (விவேகானந்த ஹில், கொழும்பு)
10 திரு. நடேசன் இரத்தினம் (விவேகானந்த ஹில், கொழும்பு)
11 திரு. க. அரியகுட்டி (பஞ்சிகாவத்தை ரோட், கொழும்பு)
12 திரு. வி. செல்வம் (விவேகானந்த ஹில், கொழும்பு)
13 விவேகானந்த சபை (கொழும்பு)
14 வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை
(லில்லி அவெனியு, கொழும்பு)
15 திரு. பொ. வல்லிபுரம் (ஓய்வுபெற்ற சுங்க அதிகாரி,
124/3, லோறீஸ் வீதி, கொழும்பு)
16 திரு. என். துரைராஜா
("சிமாட்டீஸ்", 91/2, 2-ம் குறுக்குத் தெரு, கொழும்பு 11)
17 திரு. தெ. இராமையா (54, லெயாட்ஸ் ரோட், கொழும்பு 5)
18 திரு. இ. முத்துக்கிருஷ்ணன்
(7/3, பின்ரோ பிளேஸ், கொழும்பு 6)
19 திரு. ரி. கிருஷ்ணன் (ஐ பி ஸி ரோட், கொழும்பு 6)
20 திவ்விய ஜீவன சங்கம் (116, ஹல்ட்ஸ்டோப், கொழும்பு 12)
21 திருமதி சரஸ்வதி சோமசுந்தரம்
(33/18, ஜினனந்த மாவத்தை, கொழும்பு 13)
22 திரு. வே. தம்பிராசா
(16/10, சென் லூசியஸ் தெரு, கொழும்பு 13)
23 "கவிதாஸ்" (102 2/9, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு 11)

24 திரு. கா. த. சண்முகநாதன் (37, வயிமன் ரேட், நல். யாழ்)
25 திரு. செ. சொக்கலிங்கம்
(108, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு 1 )
26 திரு, ஏ. செல்வராஜ் (115, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு)
27 'சுஜாத்தா ரெக்ஸ்ரைல்ஸ்' (82, 3-ம் குறுக்குத் தெரு, கொழு.)
28 'பிறில்லியன்ற் சென்ரர்' ( 155, கெயிசர் வீதி, கொழும்பு 11)
29 'மகாராணி' (188, கெயிசர் வீதி, கொழும்பு 11)
30 திரு எஸ். முருகேசு (புளூமெண்டோல் லேன், கொழும்பு 13)
31 திரு. ஏ. சுப்பிரமணியம்
('கல்பனாஸ்', 119 1/8, பிறின்ஸ் வீதி, கொழும்பு)
32 திரு. எம். பழனிச்சாமி 33/17, ஜிஞ்ஞந்த மாவத்தை, கொழு. 13)
33 திரு. முத்தையா
(ஸ்ரீ லங்கா ஸ்ரோர்ஸ், கொத்மலே வீதி, நாவலப்பிட்டி)
34 திரு. பி. ரி. கிருஷ்ணசாமி (தலைவர், மாரியம்மன் கோவில்
பரிபாலன சபை, கொத்மலே வீதி, நாவலப்பிட்டி)
35 "ஜெயானந்தன் ஸ்ரோர்ஸ்"
(பழைய சோனகத் தெரு, கொழும்பு 12)
36 திரு. கோ. பத்மநாதபிள்ளை
(88, வாசல வீதி, கொட்டாஞ்சேனை கொழும்பு 13)
37 எஸ். பீ. எஸ். ட்ரான்ஸ்போட் (118, டாம் வீதி, கொழும்பு 12)
38 திரு. ஏ. கே, சின்னத்தம்பி (கைதடி)
39 திரு. எம். நடராஜா (122, டாம் வீதி, கொழும்பு 12)
40 திரு அ. இ. கோபாலபிள்ளை (149, டாம் வீதி, கொழும்பு 12)
41 "பெற்ரு எசென்ஸ்" (18/1, டாம் வீதி, கொழும்பு 12)
42 திரு. எம். நல்லதம்பி (113/4, பிக்கறிங்ஸ் ரேட், கொழும்பு 13)
43 திருமதி பொன் கிருஷ்ணபிள்ளை (இராஜவள்ளி லேன்,
ஹம்டன் லேன், கொழும்பு 6)
44 திரு. கே. சிவகணநாதன் (20, லின்டன் வீதி,
லண்டன் என் 11 1 ஈ. ஆர். யூ. கே.)
45 திரு. கி, இரவீந்திரசோதி (20, மிலாகிரிய அவெனியு, கொழு. 4)
46 திரு. சிவஞானசோதி (32, இராஜசிங்க வீதி, கொழும்பு 6.
47 திரு. கே. சுப்பிரமணியம்
(28, இரத்தினகர பிளேஸ், தெஹிவளை)

48, திரு. இ. குணராசா ( 64, மெசஞ்சர் வீதி, கொழும்பு 12 )
49. திரு. பீ. யோகேஸ்வரன் ( என். கே. ஆர். ஸ்ரோர்ஸ்,
17, அம்பகமுவ ரோட், நாவலப்பிட்டி )
50 திரு. கோ. தம்பிப்பிள்ளை
( 49, பழைய சோனக தெரு, கொழும்பு 12 )
51 திரு., த. கணேசன் ( 73, பழைய சோனக தெரு, கொழும்பு 12 )
52 கல்கி ட்ரேட் சென்ரர் ( பழைய சோனக தெரு, கொழும்பு 12 )
53 திரு. எஸ். அன்பு ( பழைய சோனக தெரு, கொழும்பு 12 )
54 ஆறுமுகம் சகோதரர்
( 128, பழைய சோனக தெரு, கொழும்பு 12 )
55 தாளையன் அச்சகம் ( 115, மெசஞ்சர் வீதி, கொழும்பு 12 )
56 ஜனுப் முஹமட் காஸிம்
( "சாந்தி" பிரசாந்தி மாவத்தை, வெயாங்கொடை )
57 திரு. என். சேதுராமன் ( இட்டங்கி, காலி.
58 கே. எம். காளியப்பபிள்ளை அன் கோ.
( 263, செட்டித் தெரு, கொழும்பு 11 )
59 திரு எம். ஆர். அம்பலவாணர்
( "லக்ஷ்மி பவன்" 97, ஒல்கொற் மாவத்தை கொழும்பு 11 )
60 மெய்கண்டான் ( 161, செட்டித் தெரு கொழும்பு 11 )
61 "வூட்லண்ட்" கொம்பனி
(192. 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு )
62 சுப்பர்லைட் காமென்ட்ஸ் (258/22, டேம் வீதி, கொழும்பு 12)
63 திரு. பி. செல்வராஜ்
( அபான்ஸ் றேடேர்ஸ், 55, பேங்சால் வீதி, கொழும்பு 11 )
64 அம்பாள்ஸ் ஜுவலர்ஸ்
( 49, செட்டியார் தெரு, கொழும்பு)
65 கண்டி பெட்டிக் சென்ரர்
( 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு)
66 திரு. எஸ். சர்வேஸ்வரன்
( 188 1/J, கெயிசர் வீதி, கொழும்பு )
67 திரு. வே. கணேசமூர்த்தி
( வேலும் மயிலும் ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி )
68 திரு. க. ஆறுமுகம் ( கணேசபுரம், கிளிநொச்சி )
69 டாக்டர் திரு. ஸ்ரீரஞ்சன் ( பரவிப்பாஞ்சான் )
70 சிவா ரேடர்ஸ் ( கண்டி வீதி கிளிநொச்சி )

71 திரு சி, குமாரசுவாமி (767 ஆறுமுகம் வீதி வட்டக்கச்சி)
72 திரு A. K சுந்தரம் (கோவில் குடியிருப்பு சாவகச்சேரி)
73 திரு கு. நவராஜசிங்கம் (டெலிகோனர் சாவகச்சேரி)
74 ஸ்ரீலஸ்ரீவசந்தகுமாரி அம்மன்
(களவாவோடை' வசந்த நாகபூசனி அம்மன் கோவில் ஏழாலை தெற்கு ஏழாலை)
75 திரு ஆ. சிவபாதசுந்தரம் (ஆறுமுகம் மில் சரசாலை)
76 திரு து. சண்முகநாதகுருக்கள்
(மாவிட்டபுரம் தேவஸ்தானம் தெல்லிப்பளை)
77 தலைவர் (பூநகரி ப. நோ. கூ. சங்கம் பூனகரி)
78 திரு த. இராசேந்திரம் (வேலாயுதம் அன் சன்ஸ் வாடியடி பூநகரி)
79 திரு க. கனகராசா (பலசரக்கு வியாபாரம் வாடியடி பூநகரி)
80 திரு வ. அரியரத்தினம் (பொருளாளர் பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வு கழகம் பூநகரி)
81 வைத்திய கலாநிதி T. சீவரத்தினம் (அரசினர் வைத்திய சாலை பூநகரி)
82 தலைவர் (கல்முனை மண்ணித்தலை விஞ்சிமேடை பாரதி கி. மு. சங்கம் கௌதாரிமுனை)
83 திரு கு. சுடீகலிங்கம் (கிராஞ்சி சிவபுரம்)
84 திருமதி சரஸ்வதி சதாசிவம் (ஆசிரியை பூநகரி ம. வி. பூநகரி)

சிறந்த அச்சுவேலைகளுக்கு

நீங்கள் நாடவேண்டிய இடம்

★ சர்வசக்தி அச்சகம் ★

குருகுலம், 7ம் வாய்க்கால்,

கிளிநொச்சி.

## மில்க்வைற் அண்மை வெளியீடுகள்

- உலகப் பொதுப் பிரார்த்தனை.
- உலகப் பொதுமறை
- கவியோகி சுத்தானந்த பாரதியார்உருவப்படம்
- குருகுல அமைப்பாளரும் *"அப்புஜி"* என மதிப்பாக அழைக்கப்பட்டவருமான அமரர் **வே. கதிரவேலு அவர்களின் உருவப்படம்,**

*இவை அனைத்தையும் மில்க்வைற் மேலுறைகளிலிருந்து 25 திருக்குறள் அல்லது ரூபா 5/, க்கான அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.*

*ஒளிவிளக்காயினும் தூண்டுகோல் அவசியம்.*

*ஆதரவு வளர நற்பணி பெருகும்,*

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

---

***நீங்கள் நீண்டநேரம் தியானத்தில் இருந்து இறைவனைப் பிரார்த்திப்பதற்கு உதவுவன***

★ **ஜெயந்தி பத்திகள்**

★ **அண்ணா ,,**

★ **துர்க்கா ,,**

★ **கோகுல் ,,**

***இறைவனை ஒளிமயமாகத் தரிசிப்பதற்கு உகந்தது சிவன் மார்க் குடங்கள்.***

*தயாரிப்பாளர்கள்:*

**அண்ணா தொழிலகம்**

***இணுவில்.***

Registered as a Newspaper at the General Post Office in Sri Lanka.

# பூநகரி ப. நோ. கூ. சங்கம்

( வரையுள்ளது )

853

- ☐ புடவை வகைகள்
- ☐ பாடசாலை உபகரணங்கள்
- ☐ உரம் கிருமி நாசினி களை கொல்லிகள்
- ☐ கட்டடப் பொருட்கள்
- ☐ எரி பொருட்கள்
- ☐ நுகர்ச்சிப் பொருட்கள்
- ☐ நெல் கொள்வனவு
- ☐ அரிசி ஆலை ( உற்பத்திப் பகுதி, பாவனையாளர் பகுதி )
- ☐ கேரதீவு - சங்குப்பிட்டி ( வள்ளம் பாதைச் சேவை )
- ☐ ஒப்பந்த வேலைகள்
- ☐ கூட்டுறவு மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டம் ( பனம் தும்பு அடித்தல், வாழை நார் தும்பு அடித்தல், கால்நடை வளர்ப்பு, கற்பூரம் உற்பத்தி )

உள்ளூர் உற்பத்திக் கொள்வனவும் சந்தைப்படுத்தலும் போன்ற பல துறைகளை உள்ளடக்கிய சேவைகளைச் செய்து வருகின்றது.

மக்களின் தேவை

## பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவை.

**Duty is power which rises with us in the morning and goes to bed with us in the evening.**

இப் பிரசுரம் கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர், திரு. க. துரைராசா அவர்களால், கிளிநொச்சி 7-ம் வாய்க்கால் "குருகுலம்" என்ற முகவரியிலுள்ள சர்வசக்தி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.